பங்குனி • 1988 • 4/50

# தொண்டன்

தொட்டதெல்லாம் பொன்னுகும் வள்ளலிடம் சென்றுஒரு
தொழுநோய்க் காரன்
விட்டெறிந்த பணம்போலே யேசுபிரான் கைகளிலே
வீர ரெல்லாம்
எட்டுப்பேர் சுமக்கின்ற பெருஞ்சிலுவை தனையாங்கே
எடுத்து வைத்தார்
கட்டளைபோல் பெருவானம் கலக்கமுற ஓர்மின்னல்
கண்ட தம்மா!
வானகமும் வையகமும் கூடுவதைக் குறிப்பதுபோல்
சிலுவை வைத்து
மானமெனும் ஓர்பண்பை மனிதகுலம் காண்பதற்கு
மனது வைத்துத்
தானமொடும் தவம்பெருக முள்ளாலே மகுடமதைத்
தலையில் வைத்து
ஞானமகன் நின்றவுடன் ஞாலமெலாம் ஓர்பொழுது
நடுங்கிற் றம்மா!
எத்தனையோ பாவிகளின் பாவத்தைத் தன் தோழில்
ஏற்றுக் கொள்ள
உத்தமனுர் சிலுவையினை உடல்வைத்து அதன்மீது
உள்ளம் வைத்தார்.
கத்திமுனை பின்தொடரப் புத்தியுள்ளோர் கண்கலங்கச்
கால் நடந்து
சத்தியத்தின் திருக்குமரன் தள்ளாடும் உடலோடும்
தவழ்ந்து சென்றுர்.
வேதமகன் தாளாமல் பூமியிலே மூன்றுமுறை
வீழ்ந்து வீழ்ந்து
சோதனையைப் பொறுத்தாலும் சுமக்குமுடல் பொறுக்கவில்லை
சோர்ந்து சோர்ந்து
நாதனையே மனத்தெண்ணி நாட்டாரைக் காப்பாற்ற
நடந்து சென்றுர்.
போதனையைச் சொன்னவர்க்கு வேதனையும் சோதனையும்
பொறுமை தானே!

— யேசுகாவியம் —

கிறீத்தவ இலக்கியத் திங்களேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

பங்குனி — 1988
மலர்: 20 இதழ்: 02

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-

உள்ளே....

1. இதயத்திலிருந்து — 1
2. யேசு ஒரு பலிப்பொருள் — 2
3. மலைப்பொழிவை ஏற்றி... — 4
4. திருத்தந்தையின் சுற்று... — 5
5. மசாதா... — 6
6. வெள்ளை மணல்களில்... — 9
7. அஞ்சவேண்டாம் — 10
8. சிறுகதை — 11
9. துன்பம் சாபமல்ல... — 14
10. நூல் விமர்சனம்... — 16
11. இளைஞர் அரங்கம் — 17
12. கத்தோலிக்க திருச்... — 20
13. பொது நிலையினரும் புரி ... — 22
14. தொண்டன் வளர — 24
15. குறுக்கெழுத்துப் போட்டி — 27

**எழுதுங்கள் !**

கிறீத்தவ — சமூகச் சிந்தனைகளைக்கொண்ட ஆக்கங்களைத் தொண்டன் எதிர்பார்க்கின்றான்

புதிய சிந்தனைகளுக்கு — புதிய ஆக்க முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கத் தொண்டன் காத்திருக்கிறான்.

எழுதுங்கள்! ஏற்றவையாயின் பிரசுரிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்திலிருந்து....

இந்த நாடு இன்று பிரசவ வேதனையற்றுத் தவிக்கின்றது. ஒரு ஜீவமரணப் போராட்டமே நடந்துகொண்டிருக்கின்றது. மாண்புள்ள மனித உயிர்கள் வகைதொகை இன்றி அழிந்துகொண்டிருக்கின்றன. அமைதியைக் காண, நீதி நிலைக்க நாம் இன்னும் எத்தனை உயிர்களைத் துறக்கவேண்டும்?

இரண்டு அன்னையர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இறந்து கொண்டிருக்கின்றனர்.

அணுவணுவாய்ப் பிரிந்துகொண்டிருக்கும் அவர்களின் உயிர்த்துடிப்பிலே 'போதும்! போதும்! இந்த அழிவு' என்ற பரிதாபக் குரல் தொனிக்கிறது. அத்துடன் வருடக்கணக்காக நீடித்துவரும் இப்போராட்டத்திலே அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள் தான் என்ற உண்மையையும் இது பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

எங்கள் மத்தியில் இன்று எத்தனை விதவையர்!

கணவனை இழந்து, மக்களை இழந்து ஏங்கி நிற்கும் அவர்களுக்கு எத்தனை துயரம்! இத்தனை பாரத்தை தாங்கி வாழுகின்ற பெண்குலம் படும் துயரத்தை பிரிந்து கொண்டிருக்கும் இவ்விரு உயிர்களும் கூறுமல் கூறுகின்றன; அழுது பிரலாபிக்கின்றன. ''போதும் இந்த அழிவு!''

இந்த அபயக்குரல்கள் தானும், ஆட்சியிலே, அதன் சூழ்ச்சிகளிலே, இனவெறியிலே சிக்கிக்கிடக்கும் ஆட்சியாளருக்கும், போராளிகளுக்கும் கேட்காவிட்டால் நாட்டில் அமைதிக்கு ஏது வழி? நெஞ்சிற்கு ஏது நிம்மதி?


சி. பி. இராஜேந்திரம்.




மனந்திரும்பத் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்து வானகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியைவிட மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும்.

— லூக். 15/7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யேசு ஒரு பலிப்பொருளா?

— மட்டுநகர் ஆனந்தன்

''பிரஜா பதிர் யக்ஞஹ''

தேவன் தாமே அந்த உண்மையான பலி.

''யக்ஞேனவா தேவாதிபம் கதாஹ''

பலிமூலமே பக்தர்கள் பரமபதவி அடைந்தார்கள்.

''யக்மான ஹு பசுஹீ யஜமான மேவா ஸ்வர்க்கம் லோகம்''

எஜமானுகிய தெய்வமே பலியை நிறைவேற்றுகின்றவர்.

''ருகஸ்யா நாஹ பதநாய அதிபிஸ் வாளி தூரிதா''

பலி மார்க்கம் மூலமாகவே இவ்வுலகிற்கு பாரத்திலிருந்து விடுதலை உண்டாகின்றது.

''பாடமுடியாதினித் துயரம்
பாடமுடியாதரசே
பட்டதெல்லாம் போதும் இந்தப்
பயந்தீர்ந்திப்பொழுதென்
உடல்உயிர் ஆகியவெல்லாம் நீ
எடுத்துக்கொண்டு
உடல்உயிர் ஆகியவெல்லாம்
உகந்தெனக்கே அளிப்பாய்.

என்று திருவருட்பா கூறுகின்றது.

மேலே கூறப்பட்ட உபநிடதங்களையும், பாக்களையும், வேத சுலோகங்களையும் நாம் கவனிக்கும்போது ''பாவச்சக்கரத்தில் சுழலும் மக்களை நீதியின்படி தண்டித்து அழித்துவிடாமல், தாமே மானிடராய் அவதரித்து மானிடர் செய்த பாவத்திற்கு தம்மையே பலியாக்கினுர்'' என்றுதான் கூறக்கூடியதாக இருக்கின்றது.

கிறிஸ்தவ சமயத்திலும் ''கிறிஸ்துவானவர் வரப்போகின்ற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினுல் செய்யப்பட்டதாகிய இந்த சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமானதுமான கூடாரத்தின் வழியாகவும் வெள்ளாட்டுக் கிடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினுலேயே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினுலே அவைகளுக்கு நித்திய மீட்பை உண்டு பண்ணினுர்'' (எபி 9 : 11-12)

அப்படியாகில் பலியின் மூலமாய் மானிடராகிய நமக்கு பாவ விமோசனம் கொடுத்த அந்த அன்புத் தெய்வம் யார்? தன்னைத்தானே பாவிகளாகிய நமக்காக பலியாகிய அந்த இரட்சகர் யார்? பாவ அடிமைத்தனத்தில் இருந்து எம்மை மீட்ட அந்த மீட்பர் யார்? பரிசுத்தமான வாழ்க்கை நாம் வாழ்வதற்கு நமக்கு

உனது கண்ணீர் உனது அயலானுக்கு ஆறுதல் அளிக்கிறதென்ருல் கலங்கிக் கண்ணீர் விடத் தயாராக இரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டிய அந்த மேய்ப்பர் யார்? இவரைப் பற்றி எந்த வேதமோ, இதிகாசங்களோ, புராணமோ, வரலாறுகளோ இருக்கின்றனவா?

இப்படிப்பட்ட பலிப்பொருளைப்பற்றி ஆதியிலிருந்த ரிக் வேதம் என்ன கூறுகின்றது.

1 ஊனமில்லாத பழுதற்ற ஆடாயிருக்க வேண்டும்

2 'பாலூக' என்ற முட்கொடி அதன் தலையில் சுற்றப்பட்டிருக்கவேண்டும்.

3 அது ஒரு மரத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

4 நான்கு கால்களிலும் இரத்தம் வரும்படி ஆணிகளால் துளைக்க வேண்டும்.

5 அதன் எலும்புகள் முறிக்கப்படக் கூடாது.

6 சாகும் போது அதன் வாயில் கோம்பயை கொடுக்கவேண்டும்.

7 இல்வாட்டின் மாமிசம் புசிக்கப்பட வேண்டும.

8 ஒந்த ஆடு மறுபடியும் உயிருடன் வர வேண்டும்.

மேற்கூறிய இந்த எட்டு இலட்சணங்களுடன் எந்தத்தெய்வ அவதாரமோ, மகாத்மாக்களோ, அல்லது தேவர்களோ இதுவரை பலியாக்கப்பட்டிருக்கின்றார்களா? யோசித்துப் பாருங்கள், அல்லது இதிகாசங்கள், புராணங்கள், வேத நூல்களைப் புரட்டிப் பாருங்கள். எவற்றிலும் இந்த எட்டு இலச்சணங்களுடன் பலியாக்கப்பட்டதாக இல்லை. ஆனால் கிறீஸ்தவ சமய பரிசுத்த ஆகமத்தில் இந்த எட்டு இலட்சணங்களுடனும் யேசு பலியாக்கப்பட்டார்.

1 யேசு குற்றமில்லாதவர் — என்னிடத்தில் பாவம் உண்டு என்று என்னை யார் குற்றப்படுத்தக் கூடும். (யோவான் 8 : 46)

2 யேசுவின் தலையில் முள்முடி சூட்டினார்கள் - முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின் மேல் வைத்தார்கள் (மத்தேயு 27 ; 29)

3 யேசு சிலுவை மரத்தில் அறையப்பட்டார். அவரை சிலுவையில் அறைந்தார்கள் (மாற்கு 15 : 24)

4 யேசுவின் கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அறையப்பட்டன-என்கைகளையும் என் கால்களையும் ஊடுருவக் குத்தினார்கள். (சங்கீதம் 22 : 16)

5 யேசுவின் எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படவில்லை. அவர் மரித்திருந்ததைக் கண்டு அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. (யோவான் 19 : 33)

6 யேசு கசப்பு கலந்த காடியை உருசித்தார் - கடற் காளானை காடியில் தோய்த்து அவர் வாயிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள். யேசு காடியை வாங்கினார் (யோவான் 19 : 29-30)

7 யேசு தன் மாமிசத்தை புசிக்கும்படியான மாதிரிகையை அப்பம் பிடும் போது உபயோகித்தார். யேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைப் பிட்டு தம் சீடர்களுக்குக் கொடுத்து நீங்கள் இதை வாங்கிப் புசியுங்கள் ஏனெனில் இது என் சரீரமாயிருக்கின்றது என்றார். (மத்தேயு 26 : 26)

8 மரித்த யேசு மீண்டும் உயிரோடு வந்தார். உயிரோடு இருக்கின்றவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுவது என்ன? அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார். (லூக்கா 24 : 5-6)

ஆதி சமயமாகிய ரிக் வேதத்தில் கூறப்பட்ட எட்டு இலட்சணங்களும் கிறிஸ்தவ சமயத்தில் கூறிய பிரகாரம் யேசுக் கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. கிறிஸ்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். (எபே. 5 : 2)

எனவே மேற்கூறியவற்றை நாம் சிந்தித்துப் பார்த்தால் தன்னையே ஒரு பலிப்பொருளாக்கி மனுக்குலத்தைமீட்ட இரட்சிகர் வாழுமுன் வரலாறு வகுத்த மீட்பர் யேசுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைப்பொழிவை ஏற்றிடுவோம்!

●

பசியென்று துடிதுடித்தான் நிலையைப் பார்த்து
பசியாற்றும் ஒருவரையும் அங்கு காணோம்
நிசியென்றும் பகலென்றும் அலைந்து, கையில்
நெளிகின்ற சிலசதங்கள் அவனுழைப்பு
புசியென்று சொல்வதற்கு நாதி இல்லை
புகலிடமும் ஈவதற்கு எவருமில்லை
கசிகின்ற நெஞ்சங்கள் அங்கே இல்லை
காசினியில் ஏழைக்கு வாழ்வே இல்லை!

பார்படைத்து பலகோடி உயிரைக் காக்கும்
பரமபிதா பலபேரை பிச்சை ஏற்று
வேரில்லா மரமாக வாழ்வ தற்கா
விளையாட்டாய் படைத்திட்டான் எண்ணிப் பாரும்
ஏர்பிடித்து பல்லுயிரை காக்கும் மேலோர்
ஏழைகளாய் வாழுகின்றார் இந்த நாட்டில்
பாரெல்லாம் இக்கொடுமை உண்டு; இஃது
படைத்தவனின் பிழையன்றுநாமேஏற்போம்!

தனியொருவன் உணவின்றி வாடல் காணின்
தரணியினை அழித்திடுவோம் என்றான், அந்த
மனிதமனம் யாருக்கும் இல்லை நாளும்
மார்தட்டி சொல்வதெலாம் ஜாலம்போலும்
கனிவின்றி உழைப்போரை ஏய்த்து நிஞ்சி
கனவானாய் வாழுகின்றார் (மன சாட்சி யின்றி
இனிதான ஏசுபிரான் மலைப்பொ ழிவை
ஏற்றிடுவோம் ஏழைகளே உய்வு உண்டு.

— தமிழ்ச்செல்வன் மாசிலாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் சமூகப் பிரச்சினைகளுக்கான திருச்சபையின் பதில்

## (திருத்தந்தை 2ம் அருள்சின்னப்பரின் ஏழாவது சுற்றுமடல்



திருத்தந்தை 6ம் சின்னப்பர் எழுதிய மனிதமுன்னேற்றம்' என்னும் திருமடலின் 20 வது ஆண்டு நிறைவை ஒட்டி, இவ்வாண்டு பெப்ரவரித் திங்கள் 20ம் நாள் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அவர்கள் 'மக்களின் சமூகப்பிரச்சனைகளுக்கான திருச்சபையின் பதில்கள்' என்னும் சுற்றுமடலை வெளியிட்டுள்ளார். அதில்:

இன்றைய உலகம் மேற்கு - கிழக்கு என்று இருகூறுகப் பிளவுபட்டுள்ளதைக் கண்டித்துள்ளார் இதனுலேயே இன்றைய உலகில் பல பிரச்சனைகள், மக்கள் மத்தியில் அவநம்பிக்கைகள் ஏற்பட்டுள்ளன. இப்பிரிவினுல் பாதுகாப்புக்கான ஆயுதங்கள் குவிக்கப்படுகின்றன. இதனுல் பல பொருளாதாரப் பிரச்சனைகள், வறுமை, பட்டினி போன்றவை ஏற்பட்டுள்ளன.

திருச்சபை முதலாளித்துவத்தின் உச்சத்தையும் தீவிர கம்யூனிச போக்கையும் எதிர்க்கிறது. இவை இரண்டுமே நவீன காலனித்துவம் ஏற்படவழி செய்கின்றன.

பொருளாதார வளர்ச்சியே மனித வாழ்வின் இலக்கு என்பது தவறு. இது பிரச்சினையைத் தீர்க்காது. முழுமனிதனும் வளர வேண்டும். கலாச்சார, பண்பாட்டு ரீதியாகவும் வளர வேண்டும், அவன் தான் இறைவனின் பிள்ளையாக வளரமுடியும்.

திருமடலில் இவ்வாறு தெரிவித்துள்ள திருத்தந்தை அவர்கள் 'இன்றைய உலகில் தொடர்பு சாதனங்கள் வாழ்வைப் பற்றிய தவறுன மதிப்பீடுகளையே வழங்கிக் கொண்டிருக்கின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார்

> சில நேரங்களில் தவறு செய்யாதவர்கள் தவறு இழைத்தவர்களால் துன்புறுத்தப்படுகிறுர்கள். இதற்குப் பெயர்தான் அநியாயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியுமா ?

# மசாதா

சாக்கடலுக்குத் தெற்கே, யூதேயா நாட்டின் தென்பகுதியில், சீனுய் பாலைவனத்துப் பாதை ஆரம்பிக்கும் இடத்தில் காவல் கோட்டையாக விளங்கியது மசாதா.

சவுல் மன்னனிடமிருந்து தப்பி வாழ்ந்த தாவீதும், அவன் வீரர்களும் இம்மலையின் மீது தஞ்சம் புகுந்தனர், பாதுகாப்பான இடம் என்பதை எபிரேய மொழியில் 'மெற்சதா' என்று கூறுவர். அதுவே மருவி மசாதா ஆனது.

காலத்துக்குக்காலம் பல அரசர்களுக்கு இது பாதுகாப்பு அரணுக விளங்கியது. ஆனுல் மன்னன் ஏரோதுதான் 'மசாதாவில்' தனிக் கவனம் செலுத்தி பலம் வாய்ந்த கோட்டையாகவும், வசதிகள் மிக்கதாகவும் கட்டினுன்.

சுமார் 500 மீட்டர் உயரமுள்ள மலையில் வெவ்வேறு உயரமுள்ள மூன்று மலை முகடுகளில் அரண்களைக் கட்டினுர் ஏரோது. இரண்டு அடுக்குச் சுவர்களையும் கட்டி ஆங்காங்கே காவலர் அரண்களையும், வாயில்களையும் அமைத்தார் ஆடம்பர விழாக்கள் மண்டபம், அரச அலுவலகங்கள் என இருபெரும் அரண்மனைகள் எழுப்பப்பட்டன. தனக்கு மட்டுமென ஒரு ஓய்வு இல்லமும் கட்டப்பட்டது. ஜெருசலேம் தேவாலயம், மற்றும் தனது அரண்மனைகளைப்போலவே இங்கும் கலைவண்ணமும், கைத்திறனும், அழகும், ஆடம்பரமும் மிளிரச்செய்தார். இங்கு வருவோர் பசியால் வாடாமல் இருக்க பெரும் தானியக்கிடங்குகளும், நீர் வளத்தைப் பெருக்க மழைநீர்த் தேக்கத் தொட்டிகளும் அமைக்கப்பட்டன. குளியல் அறைகளும், நீச்சல் குளங்களும் உரோமைப் பாணியில் கண்ணுடி அறைக்குள் எழும்பும் ஆவியால் வரும் வெந்நீர்க் குளியல் அறைகளும் கட்டப்பட்டன.

வனந்தரத்தின் உல்லாசமாக விளங்கியது மசாதா.

கி.பின் 66ம் ஆண்டுக்குப்பிறகு செலற்ஸ் எனப்படும் யூத தீவிரவாதிகள் மசாதா குன்றில் தங்கினர், அங்கு தஞ்சம் புகுந்தவர்களின் எண்ணிக்கை 967. ஏரோது மன்னர் இச்குன்றில் ஏற்கனவே குவித்து வைத்திருந்த ஆயுதங்களை இவர்கள் பயன் படுத்தினர். ஏரோது மன்னர் கட்டிய பெரிய உல்லாச மண்டபங்கள், ஆயுதங்கள் செய்யும் தொழிற் கூடங்களாவும், விவிலிய ஆராய்ச்சி இல்லங்களாகவும், சிறு சிறு தங்குமிடங்களாகவும் மாற்றப்பட்டன. தங்குமிடங்களில் நெருப்பு மேடைகள், அப்பம் சுடும் இடம், சாமான்கள் வைக்கும் தட்டுகள் என புதிய அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இன்னும்பல வேறுதிருத்தங்களும் செய்யப்பட்டன.

கி.பின் 66ம் ஆண்டு முதல் 70ம் ஆண்டு வரை மசாதாவிலிருந்தே உரோமையருக்கு எதிர்ப்புக்கணைகள் அதிகமாக வரத் தொடங்கின.

கி.பின் 70ம் ஆண்டு சில்வா என்ற உரோமைத் தளபதி மசாதாவை முற்றுகையிட்டார் முற்றுகை மூன்று ஆண்டுகள் நடந்தது. அது ஒரு சுவைமிக்க வீரவரலாறு.

மசாதா குன்றின் மேல் ஏற முடியாமல் தவித்தனர் உரோமை வீரர்கள். மேலிருந்து பறந்து வந்த ஆயுதங்கள் உரோமையர்களைக் குத்திக் கிழித்தன. எனவே, தங்களது போர்த் திட்டத்தில் மாறுதல் செய்தனர் உரோமையர்கள். சுமார் பதினைந்தாயிரம் படைவீரர்களை மசாதாவைச் சுற்றிலும் அமர்த்தினர். மலை அடிவாரத்தில் படைவீடுகள் எழுப்பி அதில் தங்கிருந்து மலைமேலிருந்து எவரும் இறங்கி வராதபடியும், தேவையான பொருட்கள் மேலே செல்லவிடாமலும் காவல் காத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மசாதா குன்றின் மேலிருந்து 967 யூதர்களும் கீழே இறங்கி வரவேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவர்களுக்கு தேவையான உணவுகள் தானியக் கிடங்குகளில் இருந்தன. மூன்று ஆண்டுகள் உரோமை வீரர்கள் காத்திருந்தபின் சலிப்படைந்தனர். எனவே படைவீரர்களையும், அடிமைகளையும் கொண்டு செயற்கை மலை ஒன்றை உருவாக்கினர்.

உரோமைவீரர்கள் செயற்கை மலையின் வழியாக மேலே ஏறப் போவதை அறிந்த யூதர்கள் திகைத்தனர். பதினைந்தாயிரம் போர் வீரருக்கு முன்னால் ஆயிரம் பேர் எம்மாத்திரம்? எனவே உரோமையர் கையில் அகப்படாமல் சாவதற்கான திட்டங்களைத் தீட்டினர். சீட்டுப் போட்டுப் பார்த்து வரிசைக் கிரமமாக ஒவ்வொருவராக வந்து தலையைக் கொடுத்து வெட்டிச் சாகப்படவும், இறுதியில் உள்ளவர் மட்டும் தற்கொலை செய்வது என்றும் முடிவு செய்தனர். இத்தீவிரவாதிகளின் தலைவனை எலியாசர் என்பவர் உணர்ச்சி பூர்வமான அறிவுரை ஒன்று ஆற்றியதாகவும், இரு பெண்கள் மட்டும் தப்பிவந்து, உரோமையர்களிடம் அகப்பட்டு அவர்களிடம் தங்களது வீரச்செயல்களை எடுத்துரைத்ததாகவும் யேசு காலத்தில் வாழ்ந்த யோசேப்புஸ் என்னும் யூதவரலாற்று ஆசிரியர் எழுதி உள்ளார்.

சாவதற்கு முன்னால் மசாதா அரண்மனைப் பொருட்கள் அத்தனையும் தீவைத்துக் கொழுத்தினர். ஆனால் உணவு தானியங்களை மட்டும் எரிக்கவில்லை. உணவில்லாமல் பட்டினியாய் சாவதற்குப் பதிலாக தற்கொலை செய்து கொண்டார்கள் என உரோமையர்கள் நினைக்கக் கூடாது என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

'இறைவனே நமது வெற்றி' என்று முழக்கமிட்டுக் கொண்டே ஒவ்வொருவரும் தம் தலையைக் கொடுத்தனர்.

மூன்றாண்டுகள் முற்றுகையிட்டு மலைமேல் உள்ளவர்களை அடிபணிய வைக்கப் போகிறோம் என்ற மதமதப்பில் வந்த உரோமையர்களுக்கு பெரும் ஏமாற்றம் காத்திருந்தது.

எங்கு நோக்கினும் சவச்சடலங்களைக் கண்ட உரோமையர் கண்கலங்கினர். வீரத் தியாகிகளாக மரித்துவிட்ட யூதர்களை எண்ணி வியந்தனர்.

பின்னர் மசாதா குன்று கேட்பாரற்றுப் போய் விட்டது. ஐந்தாம் நூற்றாண்டில் சில கிறிஸ்தவ துறவிகள் இங்கு வந்து தவம் செய்தனர். பின் 19ம் நூற்றாண்டில் தான் மசாதாவைத் தேடிப்பிடிக்கும் வேலை ஆரம்பமானது. கி. பி. 1838ம் ஆண்டு மசாதா மலையையும் அதன் அழிபாடுகளையும் கண்டு பிடித்தனர்.

1963, 64ம் ஆண்டுகளில் இங்கு அகழ் ஆராய்ச்சி தொடங்கியது. கால இடைவெளியின்றி பல்லாயிரக் கணக்கானோர் அகழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். ஊண் உறக்கமின்றி முழுமூச்சுடன் செயல் புரிந்தனர்.

இப்பொழுது மசாதாவில் எந்நாளும் திருவிழாதான். காலை 10 மணிமுதல் கதிரவன் மறையும் வரை மசாதாவில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது, பல முக்கிய நிகழ்ச்சிகள் இங்கேயே நடைபெறுகின்றன. கோட்டையில் பல புதுப்பித்தல் வேலைகள் செய்யப்பட்டு உள்ளன.

சிறுகூட்டம் பெரும்படையை எதிர்த்து நின்றதன் அடையாளம் மசாதா. அரசியல் ஆன்மீக விடுதலையைத் தேடியவர்களின் சொர்க்கமாக நின்றது மசாதா.

மசாதா இனி அழியாத தொடர்கதை.

சிலர் தங்களைக் கட்டியிருக்கும் பாவக்கயிறுகளை அறுத்துக் கொண்டு வெளியே வருகின்றார்கள். சிறுத்தையிடமிருந்து தப்பித்த மான் கரடியிடம் அகப்பட்டதுபோல் பாவச் சமுதாயம், பாவச் சூழ்நிலை, பாவச் சந்தர்ப்பம் அவர்களை மறுபடியும் பாவ வீட்டுக்குள் இழுத்துச் சென்று விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுத் துணுக்கு

கொரியாவைச் சேர்ந்த 43 வயதான டேவிட்யூ உரோமை நகரில் கடந்த 17 ஆண்டுகளாக வசித்து வருகிறார் திருச்சபையின் மையமாக இருக்கும் வத்திகானுக்கு அருகில் வாழ வேண்டும் என்ற ஆசையினால் தான் கொரியாவிலிருந்து உரோமைக்கு வாழவந்ததாக இவர் சொல்லுகிறார்.

திருத்தந்தையைச் சந்தித்துப் பேச வேண்டும் என்பது இவரது கனவாக இருந்து வந்தது.

1984ம் ஆண்டு திருத்தந்தை கொரியாவுக்குப் போவதற்கு முன்பு கொரிய மொழியில் பல முறை திருப்பலி நிகழ்த்தினார். ஒரு நாள் அவரது பிரத்தியேகச் சிற்றாலயத்தில் திருத்தந்தை ஆற்றிய திருப்பலிக்கு 12 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் டேவிட் யூவும் அவரது மனைவியும், அவர்களின் ஆறு வயது மகளும் இருந்தனர்.

திருப்பலி முடிந்ததும் திருத்தந்தை ஒவ்வொருவரிடமும் பேசினார் டேவிட் யூவிடம் அவர் வந்தபோது 'திருத்தந்தையிடம் என்ன பேசவேண்டுமென்று பல்லாண்டுகளாய் நினைத்து வைத்திருந்த யாவும் மறந்துபோயின உணர்ச்சிவசப்பட்டதனால் என் உதடுகள் உறைந்து போயின என்கிறார் யூ.

"மாட்சிமை பொருந்திய...... என்ற சொற்களை மட்டுந்தான் அவரால் சொல்ல முடிந்தது. பிறகு அங்கிருந்த குரு, மாட்சிமை பொருந்திய என்ற சொற்களை அரசர்களுக்குத்தான் பயன்படுத்துவார்கள். திருத்தந்தையைப் புனிதம் பொருந்திய... என்று நீ அழைத்திருக்க வேண்டும் என்கிறார். என்னைப் பொறுத்தவரை அவர் ஓர் அரசர்தான் என்றார் டேவிட் யூ.

---

## வாயாடி வண்டுமணி



சோவியத் ரஷ்யாவுடன் சமாதனப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தாலும், மேற்கைரோப்பிய நாடுகள் தமது ஆயுத வலிமையை நவீனப்படுத்திக் கொள்ளவேண்டும்.

—அமெரிக்கா ஜனாதிபதி—

நம்ம நாட்லதான் சமாதான பேச்சுக்களுக்கு இந்தக் கதின்னு உலகம் பூரா இதே பித்தலாட்டமா தானுங்களே இருக்கு ஆயுதக்குவிப்பு ஒருபுறம்: சமாதனப் பேச்சு மறுபுறம். உருப்படாதுங்க... இந்த உலகம் உருப்படவே மாட்டுதுங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை மனங்களால் ஒரு வேலி

இனவெறிகளுக்கு
இதயங்களில் —
இருப்பிடம் கொடுப்பதால்
போர் வீரனென்ற
பொன்னுடை கிடைத்துவிடாது!

●

சாதனையாளனென்ற
சரித்திரம் படைக்க
வெறிக்குணங்கள்
விரட்டியடிக்கப்பட்டு
வெள்ளைமனங்களால்
வேலிகட்ட வேண்டும்...!

●

இறைப்பாவலனினுல்
எழுதிக் குவிக்கப்பட்ட
மனிதக்கவிதைகளின்
ஒவ்வொரு —
மேனி வரிகளிலும்
ஒரே கருத்தைத்தான்
உதிரம் காட்டுகிறது!

●

உயிர்களைப்பார்த்து
ஊமையாய் நினைப்பது —
சந்திரனைப்பார்த்து
சாக்கடை என்பதுபோல...

●

மதங்கள் கோடி
மலர்ந்திருக்கலாம் —
சாதிகள் இரண்டுதான்
சங்கீதமிசைக்கின்றன...
ஆணென்று அழைப்பதும்
பெண்ணென்று போற்றுவதும்...!

●

குழப்பக் குரங்குகளுக்குக்
குழிதோண்டி
சமாதான மனங்களைச்
சயனிக்க வைக்கும்
வேற்றுமை ஹிருதயங்களுக்கு
வேட்டுவைத்தால் —
இனங்களின் இதயங்களுள்
இன்பம் இதழ் விரிக்கும்...!

●

வாள்களுக்குத்
தோள் கொடுப்பதாலோ...
ரவைச்சர்ப்பங்களால் —
ரணங்களைச் சுமப்பதாலோ
முற்றாய் ஒரு இனம்
முதுகு காட்டிவிடாது!

●

ஆனந்தம் அமர்ந்திருந்த
அதே அகத்தில் —
விரக்திகள் இருந்து
விரிவுரைகள் வழங்க...
ஒற்றுமைப் புருக்களின்
உயர்வுதான் கரு...!

— ரீ. எல். ஜவ்பர்கான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அஞ்ச வேண்டாம்!”



தனது பிறப்பின் நோக்கம் நிறைவேறுகின்ற அந்த நாள் நெருங்க நெருங்க, கிறீஸ்து நடக்கப்போகின்ற நிகழ்வுகளை எல்லோருக்கும் எடுத்துச் சொல்கிறார். இந்த நிகழ்வுகளின் அடிப்படையில் தான் எந்த அளவிற்கு வேதனைப்பட வேண்டும், அதன் பலனை தாம் அன்பு காட்டும் சீடரை, நண்பரை, உறவினரை, ஏன் தன் மக்களையே அவர்தம் நன்மைக்காகப் பிரிய வேண்டும் என்றெல்லாம் பகிரங்கமாகக் கூறுகிறார்; பூடகமாக இயம்புகிறார்.

“கோதுமைமணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது பலன்தராது!”

“உற்ற நண்பனுக்காய் உயிரை விடுவதிலும் மேலான தியாகம், அன்பு இல்லை.”

இப்படியெல்லாம் அவர் கூறுவது கேட்டு அவரை அண்டியிருந்தோரெல்லாம் கலங்கி நிலை குலைந்து போவதை அவர் உணருகிறார்.

“மேய்ப்பனை அடிப்பேன், (அவர்தம்) ஆடுகள் சிதறுண்டு போகும்” என்ற வார்த்தைகளின் தாற்பரியம் அறியாதவரல்ல அவர். அவர்கள் சோதனைக்குட்படும் நேரங்களிலெல்லாம் “விழித்திருந்து செபியுங்கள்” என்றெல்லாம் தூண்டுபவர் அவராயிற்றே.

அவர்கள் செல்லுகின்ற படகில் தான் அவரும் செல்கின்றார் - அதுவும் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டு செல்கின்றார். என்றாலும் புயல வந்து மலையாய் அலைகளைப் புரட்டியடித்தபோது அஞ்சி, “நாங்கள் சாகின்றோமே...” என்று அலறிப் பதறியவர்களை அவர் நன்கறிவார்.

இப்படிப்பட்டவர்கள், திட்டமிட்டு, சூழ்ச்சி செய்து, காட்டிக் கொடுக்கப்பட்டு, கொடூரமான முறையில் அவர் உயிர் பறிக்கப்படும்போது, தாம் மலையென நம்பியிருந்தவர் கண்ட நிலை பார்த்து இந்த அற்ப விசுவாச ஜீவிகள் அஞ்சிச் சோர்ந்து ஒடுங்கிப் போவார்கள் என்பதை அவர் தெளிவாகப் புரிந்து வைத்திருந்தார். இதனால்,

கூடுமான வரையிலும், அவர்தாம் யாரென்பதை வெளிப்படுத்த முற்படுகின்றார். தனது வல்லமையைப் புலப்படுத்துகிறார். தான் இறைமகனே என்று நிரூபிக்கிறார். தான் செய்யும் புதுமைகளை அவர்கள் சித்து விளையாட்டாக்கி ஒதுக்கி விடாமல் தம்மை அண்டியவரை, தம்மை நெருங்கியவரை நம்பிக்கையூட்டிப் பலப்படுத்துகிறார்.

“இந்தக் கோயிலை இடித்துப்போடுங்கள் மூன்று நாட்களில் அதை மீண்டும் எழுப்புவேன்” - இவ்வாறு தனது வல்லமையைக் கூறுகிறார்;

“இதோ இறந்தோர் மீதும், உயிர்வாழ்வோர் மீதும் மனுமகனுக்கதிகாரம் உண்டு” எனக்காட்டி - இறந்தவனை உயிர்ப்பிக்கிறார்.

இதிலும் ஒருபடி மேலாய், தம் அன்புச் சீடர்களில் மூவரை மட்டும் தெரிந்தெடுத்து, தனிமையாக்கி, குன்றில் ஏறி, தனது சொல்லுக்கும், செயலுக்கும், தன்மைக்கும் அவர்கள் நிகரில்லா சாட்சியமாகும்படிக்கு அவர்கள் முன்னிலையில் மறுரூபமாகி, சுயரூபம் காட்டி நிற்கிறார். சூரியனைப் பழிக்கும் அந்த மோகனரூபத்தில் மயங்கி நின்ற மனிதருக்கு தந்தையானவரே கட்டியம் கூறுகிறார்.

“என் நேசகுமாரன் இவரே இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்” தந்தையவர் முழக்கம் இது.

ஆம், துன்பங்களின் வழியிலே, பாடுகளின் பாதையிலே தனியனாய்ப் போகுமுன், அடுத்தவர்கள் உறுதிபெற, அப்படி வேதனைகளை அரவணைத்துத் தேறுதலைக் கண்டடையச் செய்யவுள்ள தான் யாரென்று அடையாளம் காட்டுகின்றார். அவர் தான் வல்லமையுள்ளவர். அதிகாரமுள்ளவர், கடவுளின் மகன் என்றெல்லாம் எடுத்துக் காட்டுகிறார். இதனால் வரபபோகும் துன்ப நிகழ்வுகளைக் கண்டு.

— அஞ்ச வேண்டாம்.
— கலங்க வேண்டாம்
— தயங்க வேண்டாம் என்று கூறி உறுதியாய் நிலைநிற்குமாறு வலியுறுத்துகிறார்,
— விசுவாசத்தில் - வேரூன்றச் சொல்கிறார்,
— நம்பிக்கை இழக்க வேண்டாம் என்கிறார்.

என்னதான் சோதனைகள் மலை போல் எழுந்து நின்றாலும், தனது வல்லமைமிக்க தெய்வீகத்தாலே அத்தனையையும் விடுதலையாக்கித் தீருவேன் என்கிறார். இதையே அவர்தம் உயிர்ப்பினாலும் நிரூபித்துக் காண்பிக்கிறார்.

இதுதான் இறைவன் இப்பாஸ்கா நாட்களில் நமக்குத் தரும் சேதி! இதைத்தான் அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். ஆம், அஞ்சாமல் - சிந்தை குழம்பாமல்; கலங்காமல் - நம்பிக்கை இழக்காமல் பொறுத்திருப்போம். கிறீஸ்துவின் விடுதலை நிச்சயம்!

— சோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் திறந்தது


● அனுராதா பாக்கியராஜா
களுவாஞ்சிக்குடி


சிறுகதை

வாசலில் கிடந்த ஈஸிச் சியாரில் படுக்கபடியே தன்னை மறந்து கண்ணீர் சிந்திக் கொண்டு நகங்களைப் பற்க ளால் கடித்தபடியே பலமாக யோசித்துக் கொண்டிருந்தான் டாக்டர் சுதர்ஸன்.

அவனுடைய கதிரைக்குச் சற்று அருகே அவன் மனைவி வசுமதி அழுதழுது சிவந்த கண்களோடு பைத்தியமாய் உட்கார்ந்திருந்தாள்.

கவலையில் தோய்ந்த அந்த இருவருடைய முகங்களையும் பார்த்தபோது எனக்கே நெஞ்சு வேதனையால் துவண்டு போனது.

இரவு நேரத்துக் குளிர் காற்று அந்தப் பிராந்தியம் பூராவும் இதமாக வீசிக் கொண்டிருந்தது. காற்றோடு சேர்ந்து நிலவும் அழகாக ஒளியை இறைத்துக்கொண் டிருந்தது. அந்த இயற்கை யைப் பார்க்கப்பார்க்க சுதர் ஸனனின் நெஞ்சு கனமாக வலியெடுக்க ஆரம்பித்தது. ஓ! மை டியரஸ்ற் சனு... மை டாலிங் ஹர்ஷனு. அவன் இப் போது தலையில் அடித்துக் கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். அவனோடு சேர்ந்து வசுமதியும் அழுது கொண்டிருந்தாள்.

அந்தப் பாரிய இழப்பும் துயரும் தனக்குக் கிடைக்கு மென்று சுதர்ஸனன் ஒருநாள் கூட நினைத்தானில்லை. அரு மைக்கு அருமையாக அன்பு வைத்த அவனுடைய அழகு மகன் ஹர்ஷனு எதிர்பாராத விதமாக இரண்டு நாட்களுக்கு முன்னே இறந்துவிட்டான். அவனை நினைக்கும்போதுதான் சுதர்ஷனனுக்கு வேதனை தாங்க முடியவில்லை. அவனு டைய இழப்புக்கு ஒருவகையில் தானும் காரணமாகிவிட் டானே என்று நினைக்கும் போது அவனுக்குப் பைத்தி யமே பிடித்துவிடும் போல் இருந்தது.

சுதர்ஸனன் பட்டணத்து வாசி. பணக்காரக் குடும்பத் தைச் சேர்ந்தவன். டாக்டருக் குப் படித்து வெளிக்கிட்ட உடனேயே அவனுக்கு முதல் 'அப்பொயிமெண்'டாக இந் தக் கிராமத்து ஆஸ்பத்திரியே கிடைத்தது. கொழும்பிலேயே பிறந்து கொழும்பிலேயே வாழ்ந்து நாகரிகத்தில் உழன்ற வனுக்கு கிராமத்தை நினைக் கவே அருவருப்பூட்டியது.

என்னசெய்வது? அவன் நினைத் தால் வெளிநாடுகட்குக்கூடப் போவான். ஆனாலும் அனுப வம் என்றொரு சான்றிதழ் வேண்டுமே அதற்காக எந்தக் கஷ்டத்தையும் சகிக்கத் துணிந்துவிட்டான்.

சுதர்ஸனனின் மனைவி வசு மதி அருமையானபெண் துளி அகம்பாவமோ செல்வச் செருக்கோ கிடையாதவள். அக்கம்பக்கத்துச் சனங்களை அன்பாக நேசிக்கத் தெரிந்த வள். இருந்தும் கிராமத்துக்கு ரயிலேறும் போதே சுதர்ஷ னன் அவளுக்கு சில கட்டுப் பாடுகளை விதித்துவிட்டான். ''கிராமத்துச் சனங்களைக் கண்டபடி நம்பக்கூடாது, அவர்களோடு ஸ்னேகம் வைத் துக்கொள்ளக்கூடாது, வீட் டுக்கு அவர்களை அண்டவும் கூடாது, நீயும் அங்கே இங்கே யென்டு திரியக்கூடாது. பிள் ளையை அந்த ஊத்தை ஜனங் களிடம் மறந்தும் பழகவிடக் கூடாது. நம்முடைய ஸ்ரேற் றஸ் குறையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.' அவனு டைய அந்த வார்த்தைகளைக் கேட்டதும் வசுமதி திகைத் துப் போனாள். என்னதான் வசதிகளும், சுகங்களும் இருந் தாலும் சனத்தோடு சமூகத் தோடு சேராமல் பழகாமல் எத்தனை நாட்களுக்குத்தான் பெரிய மனுஷராய் வாழ்வ தாம்?

கிராமத்துப் பண்பிலே ஊறிய அந்த ஊர் மக்கள் புது டாக்டர் ஐயா, டாக்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா என்று அடிக்கொரு தடவை ஆசையோடு உதவி செய்யவும் தயிர், நெய், காய் பிஞ்சு, என்று அன்பளிப்புக் களைக் கொடுக்கவும் போட்டி போட்டுக்கொண்டு வந்தனர். அவர்களது கள்ளமில்லாத அந்தப் பண்பைக்கூட வசுமதி அசந்து போவாள்.

சுதர்ஸனனுக்கு இதுவெல்லாம் அறவே பிடிக்கவில்லை. வந்தவர்கள் போன கையோடு வசுவதிமேல் எரிந்துவிழுவான். பலகாரம் பண்டம் என்று ஏதாவது யாராவது கொண்டு வந்திருந்தால் போதும் அப்படியே அள்ளிக் கொண்டு போய் கொல்லைப் புறத்தில் கொட்டிவிட்டுத்தான் மற்ற வேலை பார்ப்பான். அக்கம் பக்கத்திலெல்லாம் ஏழை மக்கள்தான் குடியிருந்தனர். அவர்கள் பக்கம் ஹர்ஸனைக் காட்டவே பயந்து நடுங்கினான். எங்கே அந்த ஊத்தை ஜனங்கள் பிள்ளையைத் தூக்கி விடுவார்களோ என்பதுதான் முக்கிய காரணம்.

வசுமதி எவ்வளவோ புத்திமதி சொல்லிப்பார்த்தாள். “இப்படியெல்லாம் செய்யாதீங்கோ நாங்க ஏழைகளாக அதிக நேரமில்லை. பாவம் எவ்வளவு கஷ்டப்பட்டுச் செய்திருப்பாங்க நம்மில உள்ள அன்பால, மதிப்பால தானே தானே இப்படிக் கொண்டு வந்து உபசரிக்கிறுங்க. எங்களிட்டை யில்லையெண்டா கொண்டு வருகுதுகள்” அந்த அன்பான ஜனங்களுக்குக்காக அவள் பரிந்து பேசுவாள். அவன் அதையெல்லாம் கேட்டால்தானே “சும்மா இரு வசுமதி. எனக்குப் பிடிக்காத விஷயத்தை என்கிட்டப் பேசாத. இதுதான் ‘லாஸ்ட்



வோனிங்’ என்னுடை குணந்தான் உனக்குத் தெரியுமே... கொஞ்சம் சீரியஸாகச் சொல்லிக்கொண்டே எழுந்து விடுவான் சுதர்ஸனன்.

வசுமதிக்குத் தெரியும் அது அவர்களோட பரம்பரைக் குணம்... குடும்பத்தில் எல்லோருக்குமே அதுதான் நோய் எனவே அவள் அவன் விருப்பப்படியே நடக்கவேண்டியவளானுள். இப்போதெல்லாம் அவர்கள் வீட்டுக்கு யாராவது வந்தால் அம்மா இல்லை என்று வெளியே வைத்தே விடை கொடுத்தனுப்பச் சொல்லி விடுவாள். வேலைக்காரக் கிழவி அப்படியே அனுப்பிவிடுவாள். ஆனாலும் எதிர்வீட்டுக்காரப் பெண் சாருவின் தொடர்பை மட்டும் வசுமதியால் நிறுத்திக் கொள்ளவே முடியவில்லை. வசுமதி அந்த ஊருக்கு வந்த நாள் முதல் இன்றுவரை அவளுக்கு உற்ற தோழியாகவும், உதவி புரிபவளாகவும் ஓடி ஓடி வருபவள் அவள்தான் அப்பா வீட்டில் இல்லாத போதெல்லாம் சாரு வீட்டுக்கே ஓடிப் போய்விடுவான். ஹர்ஸனை ஒரு நாளேனும் காணவிட்டால் சாருவுக்கு இருப்புக்கொள்ளாது. அப்படிப்பட்ட சாருவின் உறவைக் கூடஉதறித்தள்ளுவதென்ருல்! சாருமதி அடிக்கடி அங்குவந்து போவதை அவதானித்த சுதர்ஸனன், ஒருநாள் வசுமதியை உள்ளே அழைத்துக் கண்டபடி திட்டிவிட்டான். ஏழைப் பெண்ணுக இருந்தாலும் ‘ஷ்கொலர்ஷிப்’ மூலம் படித்த ஆங்கிலப் பட்டதாரியான சாருவுக்கு சுதர்ஷனன் பேசிய ஆங்கில வார்த்தைகள் கூடவா விளங்காமல் போகும்.

அவன் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சாரு பெருகிவழிந்த கண்ணீரோடு அந்த நிமிடமே வெளிக்கிட்டவள்தான். அதன் பிறகு அந்தப் பக்கமே வந்தாளில்லை. மன்னிப்புக் கேட்போமென்று வசுமதி எத்தனையோ தடவை முயன்று பார்த்தாள் ஆனுல் சாருவின் தலைக்கறுப்பைக்கூட காணமுடியவில்லை.

காலம் வேகமாகக் கடந்து கொண்டிருந்தது. அந்தச் சம்பவத்திற்குப் பின் கிராமத்து மக்கள் யாருமே டாக்டர் வீட்டிற்குப் போனர்களில்லை. அதுவே வசுமதிக்கு ஏகப்பட்ட கவலையாய்ப் போயிற்று. உண்பது உறங்குவது, எங்காவது காரில் சுற்றுவது. மாறிமாறி இதே சீவியம். அலுத்த வாழ்க்கையாகி விட்டது.

அன்று சுதர்ஸனன் அவசரமாக நகரத்துக்குப் போயிருந்தான். அப்படியான சந்தர்ப்பங்களிலெல்லாம் வசுமதி மகனுடன் தனியாகவேயிருப்பாள். வேலைக்காரக் கிழவியும் வாச்சர் கிழவனும் தங்கள் பாட்டிற்கு இருப்பார்கள். அன்றும் அப்படித்தான் திடீரென்று ஹர்ஸனுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. நேரஞ் செல்லச்செல்ல பிள்ளைக்கு காய்ச்சலும் வயிற்றுப்போக்குடன் இரத்தமும் போக ஆரம்பித்துவிட்டது. வசுமதிக்குக் கையும் ஓடவில்லை காலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடவில்லை சுதர்ஸனனுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்லியபோது அவன் சில மருந்துகளைச் சொல்லிவிட்டு விடிவதற்குள் தான் புறப்பட்டு வருவதாகவும், பிள்ளைக்கு வேறெதுவும் கொடுக்கவும் வேண்டாம். கொண்டு செல்லவும் வேண்டாம் என்றுவிட்டான்.

வசுமதி ஒரு நர்சாக வேலை பார்த்த அனுபவசாலி. எனவே கணவன் சொல்லியபடியே குளிசைகளை தேனில் குழைத்துக் கொடுத்தாள். நீரிழப்புக்கு ஜீவனி கொடுத்தாள். கடைசியில் ஊசி போட்டுப் பார்த்தாள். நிலைமை மோசமாகிக்கொண்டே போனது. வேலைக்காரக் கிழவிக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு கொஞ்சநேரம் பேசாமல் நின்ருள். அப்புறம் வசுமதிக்கு அருகில் வந்து ''அம்மா கோவிச்சுக்காத புள்ளையைத் தூக்சிண்டு புறப்படுதாயி. அர்த மனுசன் கைவச்சாலே நோயெல்லாம் பறந்திடும் தாயீ. வைத்தியர் ஏழைதான் ஆனு இம்மாப்பெரிய நோய்க்கெல்லாம் கைவைத்தியம் கைகண்ட மருந்தும்மா. கொழந்தைக்கு வயித்தால இரத்தமும் போகுதில்லையா அஞ்சாறு முட்டையை உடைச்சி வெள்ளைக்கருவை எடுத்து நொரை பறக்க அடிச்சி சொட்டு ஆறின வென்னீரில இல்லாட்டித் தேசிக்காப்புளிவிட்டு ஏழெட்டுத்தடவை கொடுக்கச் சொல்லுவாரு. இருந்த இடந்தெரியாம நோய் பறந்திடும். புறப்படுறியாம்மா'' கிழவி கெஞ்சினுள். கிழவியின் வார்த்தைகளைக் கேட்டதும் வசுமதிக்குக் கால்கள் துடித்தன. ஆனுலும் கணவனை நினைத்துக்கொண்டாள். மீண்டும் போனை எடுத்து விஷயத்தைச் சொன்னுள். சுதர்ஸனன் சீறிச்சினந்தான். உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா வசுமதி. ஒரு M. B. B. S. டாக்டரோட மனைவி படிப்பறிவேயில்லாத பரியாரிட்டத் தூள் வேண்டப் போறியோ, அதுவும் குழந்தைக்கு... எங்கேயும் போகவேண்டியதில்லை. நான் இன்னும் ஒரு மணியில டாக்டர் சங்கரோட விடிய முதல் வந்திடுவன். நான் சொன்ன படியேகொடுத்து குழந்தையை சுவனமாகப் பார்த்துக்கோ... சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டான் அவன். வேலம்மா சேலையை உடுத்தி ஆயத்தமானுள் அதைக்கண்ட வசுமதி 'எதுக்கும் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்பம் வேலம்மா விடியிறத்துக்குள்ள ஐயா வந்திடுவார் அப்புறம் யோசிக்கலாம்' சொல்லியவள் ஹர்ஸனைக் கவனிக்கத் தொடங்கினுள். பிள்ளை தும்பைப் பூவாக நினைவிழந்து சோர்ந்து கிடந்தான் வசுமதி தேம்பித்தேம்பி அழுதாள். நேரம் ஐந்தைத் தாண்டியிருக்கும் எல்லாம் முடிந்துவிட்டது. வசுமதி தலையில் அடித்துக்கொண்டாள். நிலத்தில் புரண்டு உருண்டாள். சுதர்ஸனனுல் அந்த உண்மையை ஜீரணிக்கவே முடியவில்லை. ஓ! மை டியறஸ்ற்சனு, ஹர்ஸனு அவனை நினைத்து நினைத்து அழுதான்.

வசுமதி நினைத்தாள் இவரோட வறட்டுக் கௌரவம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால்... என்பிள்ள பிழைச்சிருப்பான் அனியாயமா என் பிள்ளையை இழந்திட்டேனே சொல்லிச்சொல்லி அவள் வாய்விட்டு அழுதபோது அவளுடைய ஒவ்வொரு துளிக் கண்ணீரும் சுதர்ஸனனின் நெஞ்சை வாள் கொண்டு அறுத்தது. ஹர்ஸனின் மரணச் சடங்குக்காக வந்திருந்த அந்த ஊர் சனங்களைக்காண வெட்கிப் போய்விட்ட சுதர்ஸனன் வேதனையால் துடித்துக்கொண்டேயிருந்தான் அவனுடைய கண்கள் இப்போது திறந்துகொண்டன.

பெண்களுக்கு நெற்றியின் நடுவே திலகமிட்டால் அது அழகுக்கு அழகு செய்கின்றது. அதே திலகத்தை நெற்றியின் மையத்தைவிட்டு சற்றுத் தள்ளி வைத்துவிட்டால் அது முக அழகைக் குறைத்துவிடுகிறது. ஒவ்வொரு பொருளுக்கும் ஓரிடம் உண்டு. அதற்குரிய இடத்தில் அதை வைக்கவேண்டும்.

●

பல சமயங்களில் நீ வீசிய வலையில் நீயே அகப்பட்டு பிறர் உன்னைத் துன்புறுத்துவதாகக் கூறி மற்றவர்கள் மீது பழியைச் சுமத்துகிருய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலியத்தின் பார்வையில்

# துன்பம் சாபம் அல்ல

மனிதன் என்று சிந்திக்கும் நிலையை அடைந்தானோ அன்றிலிருந்தே துன்பம் அவனது சிந்தனையின் கருப்பொருள்களுள் ஒன்றானது. இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொன்மையான இலக்கியங்களிலும் கூட துன்பத்தைப் பற்றிய சிந்தனைகளும் அங்கலாய்ப்புகளும் தொனிப்பதைக் காணலாம். பௌத்தமதத்தின் சித்தாந்தமே துன்பம் பற்றிய சிந்தனையிற்றான் ஆரம்பமானது. பண்டைய மதங்கள் சில, சுரலோகத்தில் கடவுள்களுக்கிடையே உண்டாகும் பிணக்குகளே உலகில துன்பம் தோன்றக் காரணம் என்கின்றன. இன்னும் சில தெய்வங்களின் கோபமும் அதிருப்தியுமே உலகின் துன்பங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் காரணம் என்கின்றன. இந்து பௌத்த சித்தாந்தங்கள் அறியாமையும், ஆசையும், கர்மவினையுமே துன்பத்தின் காரணம் என்று கற்பிக்கின்றன.

விவிலியத்தில் பழைய ஏற்பாட்டிலும், மனிதனின் பாவத்தினாலேயே அதாவது ஆதிப் பெற்றோரின் முதற்பாவத்தினாலேயே துன்பம் இவ்வுலகில் நுழைந்தது என்று கூறுவதை ஆதியாகமத்தில் அவதானிக்கலாம்.

இறைவாக்கினர்களும் திருப்பாடல்களின் ஆசிரியர்களும் துன்பம் இறைவனின் தண்டனை என்று கூறுவதையும், அதன் அகோரத்தையும் கொடுமைகளையும் வருணித்துள்ளதோடு அவற்றிலிருந்து தங்களை விடுவிக்க இறைவனிடம் இறைஞ்சி முறையிடுவதையும், பழைய ஏற்பாடு முழுவதிலும் நாம் காணலாம்.

''நன்மை செய்பவனுக்கே நல்வாழ்வு கிடைக்கும் என்றால், நல்லவனுக்குத துன்பம் ஏன் வந்தது'' என்று நீதிமான் யோபு கேட்ட கேள்வி மனுக்குலம் காலாகாலமாகக் கேட்டு முழுமையான விடை காணாத புதிர் ஆகும். இன்றைக்கும் பழைய ஏற்பாட்டின் மனநிலையிலேயே வாழும் பல கிறிஸ்தவர்கள் துன்பத்தையம் துன்பப்படுவர்களையும் பதிதத்தனமான பரிசேயத்தனமான கண்கொண்டு பார்ப்பதுண்டு. துன்பப்படுபவனைக் கண்டு இரங்குவதைவிடுத்து, அவன் துன்பத்தைப் போக்க உதவுவதை விடுத்து ''அவன் செய்த வினை, அவனது பெற்றோர்கள் அல்லது மூதாதையர் செய்த பாவம் என்றெல்லாம் பிறர் சினேகமின்றி விமரிசிப்பதில்லையா? ''என்னையும் என் குடும்பத்தையும் இறைவன் நன்றாக ஆசிர்வதிக்கின்றார், ஆகவே அவருக்கு நன்றி'' என்று பரிசேயத்தனமாகப் புளகாங்கிதம் அடைவதில்லையா? சிலோவாம் கோபுரம் இடிந்து 10 பேர் மாண்டார்கள் என்றும், ஜெருசலேமுக்கு வந்த கலிலேய யாத்திரிகர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர் என்றும் இறைமகன் யேசுவுக்கு அறிவிக்கப்பட்டபோது அவர், ''அவர்களெல்லாம் உங்களைவிடப் பாவிகள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா'' என்று கேட்டதை நினைவு கூருங்கள். ஆம் மனிதன் உள்ளவரை துன்பம் நிலைக்கும். அந்தத் துன்பம் வரப் பாவம் மட்டும் தான காரணம் அல்ல. துன்பம் இயற்கையின் விதிகளுக்கும் நியதிக்கும் உட்பட்டது. தென்னை மரத்திலிருந்து தேங்காய் விழுவதற்கும் அந்த நேரத்திலே அதற்குக் கீழே மனிதன் வந்து நிற்பதற்கும் கடவுளைக் காரணம் கற்பிப்பது முட்டாள்தனம்.

> நீ மகிழ்ச்சி இல்லாமல் இருக்கும் போது உன் இதயத்தில் கடவுள் இல்லை என்று கூடச் சொல்லலாம். காரணம் ஓர் உண்மையான விசுவாசியின் முகத்தில் துக்கம் இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் வேதனை எல்லாம் படைப்பின் அல்லது பரிணாமத்தின் பகுதி மாற்றத்தின் - வளர்ச்சியின் ஒரு அம்சம் இவ்வுலகம் உள்ள வரை வளரும் தன்மையும் இயல்பும் உள்ள வரை, இன்பமும் துன்பமும் மாறி மாறி அல்ல - சமாந்தரமாகவே தொடர்ந்து கொண்டிருக்கும், எனவே தான் பவுல் அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகின்றார் ''இறைவனின் அரசை ஸ்தாபிப்பதில் இந்த உலகமே பிரசவ வேதனையிற் துடித்துக் கொண்டிருக்கிறது.''

ஆம் துன்பமும் வேதனையும் இரட்சணியமாக, விடுதலையாக மாறலாம் இறைமகன் யேசுவின் வாழ்வும், அவரது பாடுகள்/மாணம் /உத்தானமும் இதை நமக்குத் தெளிவாக எண்பிக்கின்றன.

''துன்பர் வாழ்வைக் கெடுக்கும்'' என்பது சாதாரண லௌதீக வாதம் ''துன்பம் வாழ்வைக் கொடுக்கும்'' என்பது கிறிஸ்துவின் வேதம் ''அவர் துன்பத்தினால் நாம் வாழ்வு

— (றெக்ஸ் ஜோசப்) —

பெற்றோம் - அவர் காயங்களால் நாம் குணம் அடைந்தோம்'' என இசையா இறைவாக்கினர் துன்புறும் ஊழியன் பற்றிய கவிதையில் விபரிக்கின்றார்.

துன்பத்திலிருந்து விடுபடும் வழியை, துன்பம் வராமல் காக்கும் வழியை மற்றைய மதங்கள் போதிக்கின்றன. ஆனால் கிறிஸ்தவம் துன்பத்தையும் இன்பமாக, இரட்சணியமாக மாற்றும் வழியை காட்டுகின்றது. எனவே கிறிஸ்தவம் ஒரு துன்பியல் வாதமென்றோ அல்லது கிறிஸ்து ஒரு துன்பியல்வாதியோ என்பதல்ல. துன்பம் படைப்பின் நியதியில் ஒரு அத்தியாவசியமான அங்கம், மனித வாழ்வின் முக்திக்கும் முழுமைக்கும் இட்டுச் செல்லும் பாதையில் கடந்தே ஆகவேண்டிய படிகள் என்னும் சீரிய தத்துவம் இதனால் போதனையாலும் சாதனையாலும் காண்பிக்கப்படுகின்றது.

யேசுவின் காலம் முதல் இன்றுவரை, ஏன் இனிமேலும் தான் நல்லவர்களின் துன்பத்தினால் - அதுவும் மற்றவர்களுக்காக அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பாடுகளினாலும் துன்பத்தினாலும் அழிவினாலுமே இவ்வுலகமும் மனிதச் சமூகமும் இன்றுவரை வாழுகின்றது, இனிமேலும் வாழப் போகின்றது. இத்தகையவர்களாலேயே இடிபாடுகளுக்கும் தடங்கல்களுக்கும் அக்கிரமங்களுக்கும் மத்தியில் படிப்படியாக இவ்வுலகில் இறையரசு கட்டியெழுப்பப்படுகின்றது.

பச்சையாகவும் பாமரத்தனமாக பரிசேயத்தனமாகவும் பார்ப்பவர்களின் கண்களுக்குப் பாவிகளாகவும் பழிகாரர்களாகவும், சாபமடைந்தவர்களாகவும், இறைவனால் கைவிடப்பட்டவர்களாகவும் தென்படும் துன்புறும் ஊழியர்களிலேயே இறைமகன் இயேசு இன்றும் உயிரோடு உலவுகின்றார். அவர்களின் தன்னலமற்ற தியாக சேவையில் அவர் செயலாற்றுகிறார். உண்மையையும், நன்மையையும் நீதியையும் கொலுவேற்ற அவர்கள் செய்யும் பணிகளில் அவர் தம் மீட்புப்பணியை தொடர்கின்றார்.

அவர்களது அநியாயமான துன்பத்திலும் சித்திரவதைகளிலும், மரணத்திலும் யேசு தன் பாடுகளையும் மரணத்தையும் புதுப்பிக்கின்றார்.

அத்தகையோரது சேவைகளினாலும் தியாகங்களினாலும் பிறக்கும் நல்வாழ்விலே அவரது மகிமையான உயிர்ப்பு மீண்டும் ஒளிருகின்றது.


ஆம் கிறிஸ்துவின் உண்மையான விசுவாசங் கொண்டு அவரது மலரடி பற்றி நடக்கும் சீடர்களுக்குத் துன்பம் சாபம் அல்ல.

பசியினால் பாவம் செய்தேன் என்பவர்கள் நாற்பது நாட்கள் பசியாய் இருந்த யேசுவை ஒருமுறை நினைத்துப் பார்க்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விமர்சனம்



# அவள் ஒரு கேள்விக்குறி

வெளியீடு: திரு/மட். மறைமாவட்ட விவிலிய திருவழிபாட்டு, மறைக்கல்வி நடுநிலையம்.

''அவள் ஒரு கேள்விக்குறி'' என்னும் நூலைக் கையில் எடுக்க முன்பே, அதன் அட்டைப் படத்தில் எமது கவனஞ் செல்லுகிறது. அட்டைப் படமே ஒரு கேள்விக்குறி தான்! நவ மோஸ்தரில் சேலை அணிந்து வளையல் குலுங்க, நெற்றியில் மங்கலத் திலகம் விளங்கக் காட்சி தரும் கன்னிமரியாள், ஒரு யூதப்பெண் தானா என்ற மேலெழுந்தவாரியான கேள்விக் குறிகள் எழும்புவது இயற்கை.

எந்நாட்டவர்க்கும் இறைவனாயிருப்பினும், அவனுக்குத் ''தென்னாடுடைய சிவனே'' எனத், தமிழ்நாட்டிற்கு உரிமையாக்கி, இறைவனைத் தம்மில் நின்று அன்னியப்படுத்த விரும்பாத ஒரு தேசிய உணர்வின் பொருள் பொருந்திய பிரதிபலிப்பு என இதை நாம் கொள்ளலாம்.

ஒன்றை அப்படியே படம்பிடித்துக் காட்டுவது கலையல்ல. அந்த ''ஒன்று'' கலைஞனின் உணர்வுகளைப் புலப்படுத்த - இரசிகனை அந்த 'ஒன்றை' ஒருகணம் மறக்கச் செய்து உணர்வில் ஒன்றிக்கச் செய்யப் பயன் படும்போது தான் அது கலையாகிறது. ஒரு கலைஞன் தன் உணர்வுகளை எந்த மக்களுக்குப் புலப்படுத்த வருகிறானோ, அந்த மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய ஊடகத்தினூடாய் அது வெளிவருதல் வேண்டும்.

நாம் காணும் அட்டைப்படம் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய ஓர் ஊடகம். இறைவனைப் பெற்றெடுத்த பெருமித உணர்வு; அந்தப் பெருமிதத்தோடு...... ஆனால் எல்லாராலும், இலகுவில் புரிந்துகொள்ள முடியாத தேவரகசியத்தின் ஆழமான சிந்தனை கலப்பால் தோன்றும், இனங்காண முடியாத ஓர் உணர்வினை அட்டைப்படம் புலப்படுத்துவது போற் தெரிகிறது.

எது எப்படி இருப்பினும் நூலின் பெயரும் அட்டைபற்றி எழுகின்ற கேள்விகளும் ஐம்பத்தெட்டுப் பக்கங்களைக் கொண்ட இந்நூலைப் படித்துவிட வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது.

விதண்டாவாதக் காரரும் விவிலியத்தில் போதிய விளக்கமில்லாதவரும் விவிலியத்தைப் பிழையாக விளங்கிக் கொண்டவர்களும் திரிபுவாதக் காரருமாகிய சகலருக்கும் பதில் கொடுக்கு முகமாக எழுந்த இந்நூல் தன் முயற்சியில் வெற்றியும் பெற்றுள்ளது.


யேசு பிறப்பதற்கு முன்பும், யேசு பிறந்த பின்பும் மரியாள் பற்றி விவிலியம் கூறும் உண்மைகளையும் மரியாளுக்கும் யேசுவுக்கும் இடையில் நிலவிய தாய் - சேய் என்ற உணர்ச்சி பூர்வமாமன தொடர்புகளையும், யேசு தனது தாயாகிய மரியாளைப் பரிந்து பேசுபவளாகவும், தாயை உலக மக்கள் அனைவருக்கும் தாயாகவும் ஆக்கிச் சென்றதையும் விவிலிய மேற்கோள் காட்டி கொள்கை நிறுவிச் செல்லுந் திறன் இந்நூலிலுள்ள பாராட்டுக்குரிய அம்சமாகும்.

இந்நூல் தருக்க ரீதியாக சொல்லும் உண்மைகளுக்குக் கீழே சில உதாரணங்களைப் பார்க்கலாம். ''இறை வார்த்தையைச் சுமந்த

(தொடர்ச்சி 24ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இளைஞர் அரங்கம்**

# காதல்

"காதல் - இதயத்தில் எழுதப்படும் ஒரு புனிதமான கவிதை. உலகம் முழுவதும் இதயங்கள் அந்த மொழியில் தான் பேசிக் கொள்கின்றன. சட்டம், சம்பிரதாயம், சாதி, மதம், மொழி, இனம், நாடு ...... இன்னும் எத்தனை தடைகள்தான் குறுக்கிட்டாலும் அந்தக் கவிதை என்றுமே கட்டுக் கதையாவதில்லை.

இத்தகைய வாக்கியங்களை ஒரு உயர்தர வகுப்பு மாணவியின் பயிற்சிக் கொப்பியின் இறுதிப் பக்கத்திலிருந்து படித்தேன். அவ்வேளையில்தான் இதனையிட்டு சில வரிகள் எழுத விழைந்தேன்.

இளமையில்தான் காதல் வருமென்கிறது இலக்கியம்.

இளமையில் மட்டுந்தானா காதல் ஏற்படுகின்றது என்பது என் வினா மட்டுமல்ல, பலரது வினாவுமாகும்.

இளமையில் ஏற்படுவது எல்லாம் காதலல்ல என்பது என் கருத்து.

- உருவத்தைப் பார்த்து உளம் பூரிக்கின்றது, உடல் துடிக்கின்றது என்றால் அது காதல் அல்ல — அது வெறி.
- உடல் விளிம்புகளைப் பார்த்து குருதிக் கொதிப்பு ஏற்படுகிறது என்றால் அது காதல் அல்ல — அது ஓருவகை மயக்கம்.
- உ(டல்)றவுக்கு பகலுமில்லை — பக்கத்தாரைப் பற்றிக் கவலையுமில்லை என்றால் அது காதல் அல்ல — அதி ஒரு வகை சதைப்பசி.
- பள்ளியறையிலே தொடர்ந்து இருக்கத் தோன்றுகின்றதென்றால் அது காதல் அல்ல — அது ஒரு வகை பித்தம் - வியாதி.

இளமைக் காதலுக்கு இவைதான் பொழிப்புக்களாய் அமைகின்றன. இவை எப்படிக் காதலாகும்?

வெறித்தனம் ஓயும்போது வரும் அன்புதான் காதல். பிள்ளைகள் பிறந்த பின்புதான் காதல் பெருகுகின்றது. உறுதியானதாகின்றது என நான் எங்கோ படித்த நினைவு.

இலக்கியம் இளமைக் காதலைப்பற்றி பறை சாற்றுகிறது. சரித்திரம் இளமைக் காதலைச் சாவிலே முடிக்கிறது.

நாம் படித்த, பார்த்த, நிறைவேற்றிய பல காதல் அனுபவங்கள் கசப்பானவையே.

- காதல் தூய்மையானது — அது தோல்வியடைந்தால்!
- காதல் உயர்வானது — அது நிறைவேறாவிட்டால்!

முடிவு என்ன — தற்கொலை

பல இலக்கியக்காரர்கள் இளைஞர்களுக்கு காட்டிச்சென்ற, மிகைப்படுத்தப்பட்ட முடிவு இது.

இளைஞர்களே, இளம் யுவதிகளே பொறுத்துச் சிந்தியுங்கள். தவறான — சடுதியான முடிவுக்கு வந்து விடாதீர்கள்.

"தாய்மையின் குழைவும், தந்தையின் பரிவும் — இரக்கமும், பூமியின் பொறுமையும், பொறுப்புள்ள புன்முறுவலும், துணைவாடத் தான் வாடும் ஓருயிர் உணர்வும் எங்கே தோன்றுகின்றதோ அங்கே வாழ்வதுதான் காதல்."

— கலையுலகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறளோவியம்

# செயல்

உள்ளத்தில் ஏற்படும் உணர்வுத்தூண்டல் களின் துலங்கல் பிரதிவிம்பங்களாக அவற்றோடு தொடர்புடைய ''செயல்கள்'' அமைகின்றன. உள்ளம் பஞ்சேந்திரியங்களால் புறவுலக அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள. இவ்வனு பவங்களின் மீள்தாக்கங்களாக அவற்றோடு தொடர்புடைய செயல்கள் அமைகின்றன.

உதாரணமாக X என்ற நபர் Y என்பவரை அடித்து விட்டார். 'அடி' ஒரு அனுபவமாகி விட அதன் மீள்தாக்கமாக Y யின் திருப்பி அடிக்குஞ் செயல் அமைந்திருக்கும். (ஆனல் Y என்ற நபர் திருப்பியடிக்காமல் விட்டுவேறு வழிகளிலும் செயற்படலாம்.)

சிந்தனைப் புலனுணர்வுகள் கொண்ட ஜீவிகளென்ற வகையில் மனிதன் தனதுசெயல் களைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம். புறவுலக அனுபவத் தொகுப்புக் கெதிரான துலங்கல்கள் அவனது சிந்தனையின் வடிகட்ட லில் வடித்தெடுக்கப்பட்டதாக இருக்கவேண் டும் அல்லாது விடின் மிருகத்திற்கும் மனித னுக்கும் வேறுபாடில்லாது போய் விடும்.

ஒரு செயலை சிந்திக்காது செய்து முடித்த பின் ''ஏன் இதனைச் செய்தோம்'' என எண்ணி இரங்குவது மடமை. அதன் பலா பலன்களைச் சந்திக்கத் தயங்குவதும் அதைப் பற்றி ஆராய்வதும் பேடித்தனமாகும்.

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்பதிழுக்கு''

வாய்ப்பேச்சில் ஆகாயப் பந்தல் கட்டுவது இலகு. ஆனல் எந்தஒரு செயலை நடைமுறைப் படுத்தும் போதும் அச்செயலின் மூலம் வினை யும் நன்மைகளையும் தீமைகளையும் மதிப்பீடு செய்தல் அத்தியாவசியமானதாகும். ஒரு செயல் நிகழ்காலத்தில் சிறு நன்மையினையும் எதிர்காலத்தில் பெருந்தீமையினையும் ஏற்படுத் துமாயின் அச்செயலால் யாது பயன்? குறித்த செயலால் ஏற்படும் தற்கால இழப்பு, தற்கால நன்மை, எதிர்கால உத்தேச நன்மை தீமைகள் என்பவற்றை ஆராய்ந்த பின்னரே செயலைச் செயற்படுத்த முயல வேண்டும்.

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகிவழிபயக்கும்
ஊதியமுஞ் சூழந்து செயல்'

குறுகத்தரித்த குறள் கூறுவது இதனைத் தான்.

''செயல்'' முன்னைய தேர்வில் சித்திய டைந்து விட்டது என்போம் எனின், உடன டியாக அதனைச் செயற்படுத்தலாமா? இரண்டு கலம் நெல்விதைத்தால் நாலுகலம் விளைவாகப் பெறலாம் எனின் உடனே விதைப்பை ஆரம்பித்து விட நினைக்கும் விவசாயின் நிலைமை யாது? விவசாயத்திற்குத் தேவையான பொருள் அதாவது செல்வம் அல்லது பணம் இல்லாமல் தேவையான கருவிகளை வாங்கி விட முடியுமா? அல்லது பணமிருந்தும் கருவி கள் இல்லாவிடின் ஆவதென்ன? அத்தனையும் இருந்தும் கோடையில் பயிர் செய்ய நினைத் தால் சாத்தியப் படுமா? மழையும் பெய்கிறது எனக் கொள்வோமேயானலும் துணை புரி

இடையூறுகளைக் கண்டு கலங் காதே. இடையூறுகளில்தான் உனது வீரமும், தியாகமும், மனப்பக்குவமும் உயர்ந்த நோக் கங்களும் வளர்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோர் எவருமின்றி விளைவினைப் பெறமுடியுமா? நன்மை செலவு ஆய்விலே சித்தியடைந்த நெல் விதைக்கும் செயல் கூட இத்தனை தேவைகளை (Requirments) யுமல்லவா பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது சதாரண நெல் விதைப்பபே இவ்வாறேனின் பொறுப்பு வாய்ந்த ''செயல்களுக்கு''? பதில் குறளே தருகிறது.

''பொருள் மருவி காலம் வினையினோ
டைத்தும்
இருள் தீர எண்ணிச் செயல்''

இரண்டு கட்டத் தேர்விலும் ''செயல்'' சித்தியடைந்து விட்டது என்றால் இனி அடுத்த கட்டம் என்ன நடைமுறைப் படுத்துவது தானே......கொஞ்சம் பொறு மகனே! என்ற குறளின் குரல் கேட்கிறது.

''தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை''

ஆடியமாட்டை ஆடியும், பாடியமாட்டை பாடியும் கறப்பது போல் எவ்வெச் செயலை எவ்வெவ்விடங்களில் எவ்வெக் கால இடைவெளியில் செய்தல் வேண்டுமோ அவ்வாறு செய்தல் வேண்டும். விதைப்பது முடிந்தவுடன் அறுவடைக்கு ஆயத்தம் செய்வதா? தவறல்லவா மகனே! உன் செயலை எவ்வெக்கட்டங்களூடாகச் செய்து முடிக்க வேண்டுமோ அவ்வக்கட்டங்களூடாகவே செய்!..... அப்போது தான் உன்செயல் குறித்த இலக்கையடையும்.

இன்னுமொன்று மகனே!...... குறளின் குரலிலே குழைவு - இவ்வளவு சோதனைக் கட்டங்களையும் சித்திபெற்று இறுதித்தேர்வுக்கு வந்துள்ள ''செயல்'' சற்று நிதானிக்கிறது.- ''குடப்பாலில் துளிவிஷம் போல்'' என்று கேள்விப்பட்டிருக்கின்றாயா? நல்ல நோக்கத்திற்காக நல்ல நடைமுறைகளூடாக நல்ல கருவிகளைக்கையாண்டு ''செயல்'' மேற்கொள்ளப்படப் போகிறது எனினும் நெஞ்சிலே ஒரு நெருடல்.. ...ஒரு சந்தேகம். இச்செயலில் சிறு தீமை இருக்குமா? நிறுத்துமகனே! நிறுத்து!

''குன்றின் அறியாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்''

விலக்கப்பட்ட கனிகள் நிறைந்த மரங்கள் இன்று ஒன்று அல்ல, பல உண்டு. கட்டளையை மீறாதே.

●

உன் கண்களில் கருணை மழையைப் பொழிந்து வறண்ட பாலை நிலங்களை நீ அடிக்கடி நனைக்க வேண்டும்.

புரிந்ததா மகனே! மலைபோல உயர்ந்த நிலையில் உள்ளோர் உயர்ந்தோர்... எனினும் குன்றிமணியளவு தீச்செயலைச் செய்தாலும் அவர்கள் தாழ்த்தப்பட்டு விடுவார்கள். ஆகவே நிதானி! நன்றாக சிந்தித்து முடிவெடு. அறிவிலே தெளிவுடையோர் தாம் இன்னல் படினும் தமக்கு இடுக்கண்வரினும் தீயசெயல்களை ஒருபோதும் செய்யமுற்பட மாட்டார்கள். எனவே மகனே உனது நிதானம் தீய செயல்களை விலக்கி வைத்து நல்ல நலன்பயக்கும் செயல்களைச் சீர்தூக்கிச் செய்வதற்கு உதவும். இதோ இவ்விரு அடிகளையும் நினைவில் நிறுத்திக் கொள்.

''இடுக்கண்படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சியவர்''


ஓ! மிக்க நன்றி! சிந்தனைகள் சிறகடிக்கின்றன. என்றோ எழுதி வைத்த குறளடிகளுக்கு இன்று ஓவியத்தீட்ட முயல்கின்றோம் சமகால நிகழ்வுத் தூரிகையால் நிதர்சனப் படத்தை வரைய முனைகிறோம். சமகாலத்தில் ஒவ்வொரு செயலுக்கும் அளிக்க வேண்டிய 'நிறைகளை' பொறுப்பானவர்களில் எத்தனை பேர்தான் மதிப்பிட்டுச் செய்கிறார்கள்? சிந்திக்கின்றோம்.! சொல்கிறோம்.

செயல்களை மூளையுடன் தொடர் படுத்துங்கள். இல்லாவிட்டால் பிரளயங்கள் தான் பிறந்து வரும்.

எம். கணேஷமூர்த்தி.
மாகோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கத்தோலிக்க திருச்சபையும் சமகாலப் பிரச்சினைகளும்

## ஓர் ஆய்வுரைக் கண்ணோட்டம்

— ஆனந்தா A. G. இராஜேந்திரம் —

### அத்தியாயம் 4

''போலாந்திலிருந்து ஒரு பாப்பரசர்' (A POPE FROM POLAND) என்னும் நூலில் ''சருவதேச ரீதியில் 2ம் அருள் சின்னப்பர், கிழக்கைரோப்பிய நாட்டு அரசுகளுக்கும், திருச்சபைக்குமிடையிலான தொடர்பு வலைப்பின்னலை விருத்தி செய்யும் செயற்பாட்டின் மூலம் பலமான தாக்கமொன்றை ஏற்படுத்தியிருக்கிறார்'' என்று கத்தோலிக்க ஆய்வாளர்கள் எழுதியுள்ளார்கள். அவர்களின் கணிப்புப்படி பாப்பரசர் ''கலாச்சாரத்திலும், ஆன்மீகத்திலும் ஒன்றித்து பரந்துபட்ட ஐரோப்பா என்ற படத்தை முன் வைத்திருக்கிறார்'' இதை உண்மை என நிரூபிக்கத்தக்க வகையில் 1979ல் தம் தாய்நாடான போலந்து முதல் 1982ல் ஸ்பெயின் நாடு வரையிலான தமது பயணங்களில் முழு ஐரோப்பாவினதும் ஒன்றிப்புக்குக் குரல் கொடுத்திருக்கிறார் ''ஏற்பாடுகள் மூலம் வரையறுக்கப்பட்ட நாட்டு எல்லைகள் மனிதனதும், நாடுகளதும் தொடர்புக்குத் தடைபோட முடியாது. மனித உறவு எல்லைகள் கடந்தது. ஐரோப்பிய நாடுகள் தம் மத்தியில் பிளவுகளுக்கு இடம் கொடுக்க முடியாது என்று வெளிப்படையாகவே குரல் கொடுத்திருக்கிறார், 1985ல் பிரச்சனைக்குள்ளாயிருந்த ஒலலாந்துத் தலத் திருச்சபையை பிளக்கச் செய்யும் என்ற எச்சரிக்கைகள் விடப்பட்டும், அவர் அங்கு மேற்கொண்ட வெற்றிகரமான பயணம் கூட அவரது புதிய முயற்சியின் ஓர் அங்கமென்றே சில அவதானிகள் கருதுகிறார்கள்.

ஆக பதவியேற்ற ஆரம்பத்தில் திருச்சபையின் ஞான அதிகாரிகள் தீவிர அரசியலில் பங்கெடுக்கக் கூடாது என்று வலியுறுத்தி அரசியலா, துறவறமா என்ற முடிவில் ஒன்றைத்தான் தெரிந்தெடுக்கலாம் என்று லத்தீன் அமெரிக்க நாடொன்றின் கல்வியமைச்சர், சுகாதாரஅமைச்சர்களாக இருந்த சேசு சபைக் குருவானவர்களுக்கு வரையறை வகுத்த பாப்பரசர், இன்று இத்தகைய முயற்சியை மேற் கொண்டிருப்பது வியப்பை அளிக்கவே செய்யும். எனவே அவரது சிந்தனையில் ஒரு திட்டம் உருவாகி இருப்பதை இந்நடத்தைகள் காட்டுகின்றன. ஏனெனில் பிலிப்பைன்சில் 1986 பெப்ரவரி மக்கள் புரட்சியில் பங்கேற்று மாற்றத்தை உருவாக்கிய தலத்திருச்சபைக்கு அவரது ஆசீர் இருந்தது. நிக்கரகுவாவின் சண்டனிஸ்தா ஆட்சியாளருக்கு எதிரான பாதையில் செல்லும் தலத்திருச் சபைக்கும் அவரது ஆதரவு இருக்கிறது.

இதுவரை உருவான இரு உலகப்பெரும் போர்களும் ஐரோப்பிய மண்ணிலே உருவெடுத்தன என்றகாரணத்தினாலோ தெரியாது அக்கண்டத்தை ஒற்றைப்படுத்தி, கிறீஸ்தவ ஐக்கியத்தில் திளைக்கச் செய்து அதன் மதிப்பீடுகளின் அடிப்படையில் இன்னுமொரு அழிவுக்கான யுத்தம் ஏற்படாமல் தடுப்பது அவரது நோக்கமாக அமையக்கூடும். அதே சமயம், இம்முயற்சி வென்றால், இதே பாணியில் ஏனைய நாடுகளும் ஒன்றிணைக்கப்பட முடியும். இதனால் உலகம் முழுவதும் ஒரே சிந்தனை, ஒரே நோக்கு, ஒரே செயற்பாடு. எங்கும், எதிலும், எப்போதும் சமாதானம் என்ற நிலை வரலாம்.

ஏனெனில் அவரது போதனைகள் நாடுகளின் 'எல்லை கடந்த' ஐக்கியத்தை வலியுறுத்துகின்றன. அத்துடன் உலகில் கிறிஸ்தவ பெறுமானங்களின் உயர்வையும், பலனையும் எடுத்தும் உரைக்கின்றன.

இத்தகைய அவரது செயற்பாடுகளில் இன்னுமொரு அபிவிருத்தியாகப் பிளவுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்த திருச்சபைகளின் இணைப்புக்கும் அவர் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார். ஒரிரு நுண்ணிய விடயங்களைத் தவிர்ந்த ஏனைய அம்சங்கள் சகலவற்றிலும் அங்கிலிக்கன் திருச்சபைக்கும், கத்தோலிக்க திருச்சபைக்கு மிடையில் இணக்கமும், மிகுந்த நெருக்கமும் ஏற்பட்டிருக்கிறது. இவ்விரு திருச்சபைகளும் மீண்டும் இணைகின்ற காலம் ஒன்றும் தூரத்திலில்லை என்பது இவ்விணைப்பிற்காக உழைத்தவர்களின் நியாயமான நம்பிக்கையாகும். இத்தகைய இணைப்பு கிறிஸ்தவ அடிப்படையில் உலகை ஒன்றிணைக்கும் அவரது கனவை நனவாக்கும்.

பாப்பரசரின் இம்முயற்சி எந்தளவு உலகநாடுகள் மத்தியில் வரவேற்புப் பெற்றுள்ளன என்பது பற்றிச் சந்தேகம் எழுவது நியாயமானதே.

பொதுச் சந்தையின் பிரதான இடமான புரூசல்ஸ், லக்சம்பர்க் ஆகியவற்றிற்கான 1985ம் ஆண்டின் தமது பயணத்தில் அவர் தம் கருத்துக்களை வலியுறுத்தியிருக்கிறார். அதே சமயம் புரூசல்ஸ், ஸ்ராஸ்பேர்ன், பிரான்ஸ், லக்சம்பேர்க்கில் ஐரோப்பிய பாராளுமன்றம் கூடுகின்ற அதேவேளை அதன் அதிகாரிகள் பெரிய எண்ணிக்கையில் ஒரு பொதுவான அரசியலமைப்பை உருவாக்குவதற்கும், ஐரோப்பிய ஒற்றுமைக்கும் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதே சமயம் ஐரோப்பிய சமூகத்தின் தலைமையகத்தில் - புரூசல்சிலும், பெல்ஜியத்திலும் அதிகாரிகள் ஒரு பொதுவான நாணயத்தை உருவாக்குவதிலும், பொது இராணுவ அமைப்பை உருவாக்குவதிலும் தமது உழைப்பை ஈடுபடுத்தியுள்ளனர். எனவே திருச்சபை கிழக்கைரோப்பிய நாடுகள் இருபகுதியினரதும் நடவடிக்கைகள் எதேச்சையான வையல்ல மாறாக அவை திட்டமிட்ட நடவடிக்கைகளே என்ற அவதானிகள் கருத்தில் தவறு இருக்க இடமில்லை.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் சமாதானத்தை நிலைநாட்டும் பணியில் திருச்சபை தயங்காது அரசியலை ஊடுருவுகிறது என்பது தெளிவு. நாம் முன்னர் பார்த்தபடி திருச்சபையால் இதைவிட பொருத்தமான வேறு எதையும் செய்யவும் முடியாது. இன்று உலகின் பல பாகங்களிலும் மக்கள் சமாதானத்தை நிலைநாட்டுவார் என்ற நம்பிக்கையில் திருச்சபையையும், அதன் பாப்பரசரையும் ஏறிட்டு நோக்கியவர்களாக இருக்கிறார்கள் என்பதும் ஓர் உண்மையாகும்.

— தொடரும் —

---

* அதிக கோபம் அடைந்திருக்கும் போது யாருக்கும் பதில் சொல்லாதீர்கள்.
* மிக அதிகமாகப் பேசுபவர்கள் அதிகமாகப் பொய்யும் சொல்லுவார்கள்.
* நன்றாகத் தொடங்கிய வேலை, பாதி முடிந்ததற்குச் சமம்.
* முட்டாளின் முழு வாழ்க்கையும் புத்திசாலியின் ஒரு நாள் வாழ்க்கைக்குச் சமம்.
* சட்டென்று பதில் சொல்கிறவனுக்குப் புத்தி மட்டு.
* அகம் பாவம் ஒரு பொல்லாத குதிரை; அது தன் எஜமானை ஒரு முறையாவது கீழே தள்ளாமல் விடாது.
* பணம் சம்பாதிப்பவன் பெரிய மனிதன் அல்லன்; அதைப் பாதுகாப்பவனே பெரிய மனிதன்.
* கண் உள்ளவனைக் காட்டிலும் குருடன் குறைவாகவே தடுக்கி விழுகிறான்.
* மனைவியைப் பற்றி குறை சொல்பவன் தன்னையே இழிவு செய்து கொள்கிறான்.
* உன் உள்ளம் எப்படியோ, அப்படியே உலகம்.
* பசி - உழைப்பு - வியர்வை ஆகியவையே மனிதனுக்கு மிகச் சிறந்த மூலிகைகள்.
* ஒரு பெண் இன்னொரு பெண்ணை ஒருபோதும் புகழ்வதே இல்லை.
* முட்டாளும் குழந்தையுமே உண்மை பேசும் நல்லவர்கள்.

தொகுத்தவர்: ஆர். எஸ். செல்வரெத்தினம்
218/ஏ, அல்வாய் வடக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நிலையினரும் புரிந்துணர்வும்

(போதகர் K. இயேசுராசா)

அன்னையாம் திருச்சபை 1987 ஆம் ஆண்டைப் பொதுநிலையினரின் ஆண்டாகப் பிரகடணம் செய்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் ஏற்படுத்திய பொதுநிலையினரின் விழிப்புணர்ச்சி இவ்வாண்டில் செயல் வடிவம் பெற ஏதுவாக அமைந்தது. திருமுழுக்கின் வழியாகஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் அரச, குருத்துவ, ஆசிரிய கூட்டத்தின் உறுப்பாளன் ஆகின்றான். ஆனால் சங்கம் முடிந்து 22 ஆண்டுகள் சென்றும் பொதுநிலையினர் தங்கள் மேன்மையை எண்ணத்துணியவில்லை. இதற்காகத் தேவைப்பட்டது ஒரு பொதுநிலையினர் ஆண்டு.

திருச்சபையின் பணியிலே ஒவ்வொரு பொதுநிலையினருக்கும் ஒருபாரிய பொறுப்புக் காத்திருக்கின்றது.

### யார் இந்தப் பொதுநிலையினர்?

திருமுழுக்கால் கிறிஸ்துவின் உடலில் ஒன்றாய் இணைந்து - இறை மக்கள் குழுவில் அங்கமாகி - திருச்சபையிலும், உலகிலும் மறைப்பணியைத் தொடர்ந்து நடத்துகின்ற (துறவறம் தவிர்ந்த விசுவாசிகளே பொதுநிலையினர். இவர்கள் உலகிலே வாழ்ந்து உலகைப் பண்படுத்தி கிறிஸ்துவின் பாதத்தில் அதை அர்பணிக்க வேண்டியவர்கள். உலகிலே வாழ்ந்து கொண்டு கிறிஸ்துவை உலகிற்கு அளிக்கவும், உலகைக் கிறிஸ்துவுக்கு அளிக்கவும் வேண்டியவர்கள்.

### பணித்துறைகள்;

திருச்சபை, சமூகங்கள், பங்குத்தளம், மறைமாவட்டம், குடும்பம், அலுவலகம் — ஆகியவை பொதுநிலையினர் செயல்படும் பணித்தளங்களாகும்.

குருகுலத்தார் ஆற்றும் பணிகளில் பொதுநிலையினர் பெரிதும் உதவி செய்ய முடியும். உலகில் வாழும் அனைத்து மனிதரோடும் சேர்ந்து: குடும்பம், பண்பாடு, கலைத்துறை, வணிகத்துறை, அரசியல் துறை, சமூகத்துறை போன்றவற்றில் எல்லாம் உழைக்கலாம்.

**பணிகளில் சில:-** பங்குச் சமூகத்தில் அப்போஸ்தல பணியில் நேரடியாக ஒத்துழைத்தல்.

### பங்கில்:

- திருச்சபையில் நின்று அகன்று நிற்போரை மீட்டுக்கொண்டு வரல்.
- இறை வார்த்தையை குறிப்பாக மறைக் கல்வியில் அளித்தல்.
- தம் தனிப்பட்ட தொழில் திறமையைப் பங்கு நலனுக்குப் பயன் படுத்தல்.
- திருவழிபாட்டில் முன்னின்று பங்கேற்றல்.

### குடும்பத்தில்:

- சொல்லாலும் முன்மாதிரியாலும் குடும்பத்தில் நற்பணியாற்றல்.
- திருமணத்தின் பொருள் உணர்ந்து விசுவாசத்தில் சாட்சியாகத் திகழ்தல்.
- பிள்ளைகளை விசுவாசத்தில் வழிநடத்தல்.
- தம் சீரிய குடும்ப வாழ்வு பிற குடும்பங்களையும் சென்றடைய வழி சமைத்தல்.

### சமூகத்தில்:

- தான் வாழும் சமூக மனப்பாங்கு, பழக்க வழக்கம், சட்ட அமைப்பு ஆகியவற்றில் கிறிஸ்தவ உணர்வைப் புகுத்துதல்.
- கல்விக்கூடம், தொழிற்சாலை, வாழும் தெரு, நண்பர்கள் ஆகிய பல்வேறு நிலையில் சான்று வாழ்வு வாழ்தல்.

ஆகவே பொது நிலையினர்கள் திருச்சபையிலும் சமுதாயத்திலும் புளிக்காரமாகச் செயல் புரிய வேண்டியவர்கள். புளிக்காரம் மாவில் இருப்பதைக் காணமுடிவதில்லை. ஆனால் அதன் செயலை அது அந்த மாவில் காட்டிவிடும். அதே போல் பொது நிலையினரின் செயலும் சமூகத்தை மாற்றவேண்டும். மாற்றவேண்டுமானால் கிறிஸ்துவை முழுமையாக அறிந்து அறிவிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக ஒரு பங்கில் 3000 அல்லது 4000 கிறிஸ்தவர்கள் இருந்தால் ஒரு பங்குக்குருவானவரால் அவர்களில் மாற்றத்தைக் கொண்டு வருவதும், தேவைகளை நிறைவு செய்வதும் கடினம். அதற்காகப் பொதுநிலையினரான நாமே முன்வந்து நமது பங்கில் விசுவாசத்தை வளர்க்கவேண்டும் இதைத்தான் 2ம் வத்திக்கான் சங்கம் நமக்கு நினைவூட்டியது 20 நூற்றாண்டுகள் சென்றாலும் இன்னும் இளமை குன்றாது இருக்கும் திருச்சபையில் நமது பணி மேன்மை மிக்கது

## பணியினைப் புரிவது யார்?

நாம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு, சிலுவையைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு, மற்றவர்களை மதிக்காது வாழ்கின்றோம். நம்மிடையே ஏற்றத் தாழ்வுகளை வளர்க்கின்றோம் இந்நிலை மாற்றப்படவேண்டும்.

எடுத்துக்காட்டாகத் தீப்பெட்டியைப் பார்க்கின்றோம். அதில் பலபல லேபல்கள் ஒட்டப்பட்டிருக்கும். ஆனால் எந்தப்பெட்டியானாலும் அதன் உள்ளே இருப்பது தீக்குச்சி. அதுகொடுப்பது தீ அதேபோல நாமும் நான் இந்து. கிறிஸ்தவன், முஸ்லிம் என்று லேபல்களை ஒட்டிக்கொண்டிராது அனைவரும் மனிதன் என்ற உணர்வோடு பணிபுரிய வேண்டும். அன்பு, பண்பு, தாழ்வு, பரிவு, இரக்கம் நிறைந்த பணி புரிய அனைவரும் ஆயத்தமாகவேண்டும்.

## தாண்டவன்வெளியில் சான்று வாழ்வு:

தாண்டவன்வெளிப் பங்கின் ஆலய விழாவுக்கு ஆயத்தமாக 29-1-88ல் கொடியேற்றம் என அறிவிக்கப்பட்டது. ஆயத்தங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 28-1-88ல் பங்குத்தந்தை நோயுற்றார். உடல்நிலை சற்று நலிவுற்றுக் காணப்பட்டது. வைத்திய பரிசோதனைக்கு பின் குருவானவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுவிட்டார். மறுநாள் கொடியேறவேண்டும். முதல்நாள் பங்குத்தந்தை பங்கைவிட்டு சிகிச்சைக்காகப் புறப்பட்டு வீட்டார். பங்கின் மேய்ப்புப்பணிச் சபை உறுப்பினர்கள் ஒன்று கூடினார்கள். திட்டமிட்டார்கள். தீர்மானம் எடுத்தனர். நவநாட்களை நடாத்தப் பக்கத்துக் குருக்களின் உதவியை நாடினார்கள். குருக்களே ஆற்றும் பணிகள் தவிர்த்த ஏனைய பொது நிலையினர் ஆற்றும் பணிகளை எல்லாம் முன்னின்று நடாத்தினர்.

இந்நாட்களின் சிறப்பு நிகழ்ச்சியாக வளர்ந்தோருக்கு மூன்று நாள் ஞான ஒடுக்கம் சிறுவர்களுக்கான புதுநன்மை, உறுதிப்பூசுதல் ஆயத்தம், திருமுழுக்கு, திருமணம் புதுப்பித்தல் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறத்தான் செய்தது. இதன்படி:

i. ஞான ஒடுக்கத்தில் பங்குபெற்றோர் ஏறக்குறைய 100 பேர்
ii. திருமுழுக்குப் பெற்றோர் வளர்ந்தோர் உட்பட 7 பேர்
iii. நற்கருணை, உறுதிப்பூசுதல் பெற்றோர் 126 பேர்
iv. திருமணம் புதுப்பித்தல் 2 குடும்பங்கள்

இத்துடன் 7-2-88ல் திருவிழாவும் சிறப்புடன் நடைபெற்று முடிந்தது.

## ஆயரின் புகழாரம்:

திருவிழாத் திருப்பலிக்கு வருகை தந்த ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை வாழ்த்தினார். பங்குத்தந்தை உடல் நலமற்ற வேளையிலே பொது நிலையினர்கள் புரிந்துணர்வுடன் செயல் பட்டமை போற்றுதற்குரியது. இது அவர்களின் விழிப்புணர்வைக் காட்டுகின்றது. இதுபோன்ற எடுத்துக்காட்டான பங்குகள் மறை மாவட்டம் முழுவதும் உருவாகவேண்டுமென்று ஆசிக்கின்றேன் என்றார். திருவிழாவும் முடிநதது, திருவிழாக்காலத்தில் பங்கு மக்கள் பங்குத்தந்தைக்காக இறைவனை வேண்டினர். 9-2-88ல் நலம்பெற்று மீண்டும் பங்கிற்கு வந்து சேர்ந்தார். பணியினைத் தொடர்கின்றார்.

## தவக்காலத்தில் மற்றுமோர் முயற்சியும் செயலும்;

தவக்காலம் 17-2-88 உடன் ஆரம்பமாகி விட்டது. தவக்கால வெள்ளிதோறும் மக்களைச் சிறப்புப் பணியில் ஈடுபடுத்த மற்றுமொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு செயலாக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. வெள்ளி மாலை 4 மணி வியாகுல பிரசங்கம், 4-30 ஒரு குருவானவரின் நற்சிந்தனை 5 மணிக்கு திறந்த வெளிச் சிலுவைப்பாதை 5-30க்கு திருப்பலி ஆகியன நிகழ்கின்றன. இதுவும் பொது நிலையினரின் முயற்சியே. மேலும் பங்கின் 8 வட்டார இறைமக்களையும் இதில் இணைக்கும் முயற்சியாக ஒவ்வொரு வெள்ளியையும் ஒவ்வொரு வட்டார இறை மக்களும் சிறப்பிப்பது பொது நிலையினரைச் செயற்படுத்தும் நிகழ்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(16ம் பக்கத் தொடர்ச்சி)

தால் விவிலியம் பக்தி வணக்கத்துக்குரிய நூலானது. அவ்வாருனல் அவ்வார்த்தைகளைத் தந்த இறைவனையே தாங்கிநின்ற மரியாள் அதேபோன்ற பக்தியைப் பெறுவதற்கு அருகதை அற்றவளா என்ற கேள்வி பொருள் பொதிந்த கேள்வியாகும்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் கிறிஸ்தவர்கள்; அதாவது கிறிஸ்து சொன்னபடி, செய்துகாட்டியபடி நடப்பவர்கள் யேசு மரியாளுக்குள் உருவாகினர் என்றால் யேசுவால் அவள் மகிமைப்படுத்தப்பட்டாள் என்பது பொருள். அவ்வாருனல் கிறிஸ்துவின் வழிவந்தவர்களும் மரியாளை மகிமைப் படுத்துதல் வேண்டும். அவ்வாறு மரியாளை மகிமைப் படுத்தாதவர்கள் கிறிஸ்து காட்டிய வழியைப் பின்பற்றாதவர்கள் என்று பொருள். இக்கருத்து மறுக்கமுடியாத வகையில் இந்நூலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேவையுள்ளவர்கள் மரியாளைத் தமக்காகப் பரிந்து பேசுபவளாகக் கொள்கிறார்கள். கானாவூர்த் திருமணத்தின்போது அந்த மக்களுக்கு ஒரு தேவை இருந்தது. தேவையுள்ள மக்கள் தமக்காக யேசுவிடம் பரிந்து பேசும்படி மரியாளைக் கேட்கிறார்கள். யேசுவைப் பெற்று, வளர்த்து யேசுவோடு வாழ்ந்து, யேசுவை நன்கு புரிந்துகொண்ட மரியாள் பரிந்து பேசுகிறாள். அதாவது அவர்களுக்கு உதவிசெய்ய முன்வருகிறாள். யேசு தனது தாயின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றுகிறார். இது விவிலியத்திற் காணப்படும் மறுக்கமுடியாத நிகழ்ச்சி. இதனை மறுக்கமுடியாத சான்றாகக் கொண்டு விவிலியம் காட்டிய வழியில் நடக்கும் கிறிஸ்துவின் பிள்ளைகள் மரியாளைத் தமக்காகப் பரிந்து பேசுபவளாகக் கொள்கிறார்கள். இது கிறிஸ்துவால் அங்கீகரிக்கப்பட்டது. கிறிஸ்துவால் அங்கீகரிப்பட்டதை மக்கள் பின்பற்றுவது சரியானதே என்பது இந்நூலில் தருக்க ரீதியாக நிறுவப்பட்டுள்ளது.

மக்கள் மரியாளை வாழ்த்துகிறார்கள். இது விவிலிய உண்மைகளுக்கு அப்பாற்பட்டதல்ல. இறை தூதுவரான கபிரியேல் வாழ்த்துகிறார் என்றால், அதனைச் சாதாரண நிகழ்ச்சியாகக் கொள்ளமுடியாது. இறைவனால் ஏவப்பட்டவர் இறைவனின் கருத்தைக் கூறுகிறார். பின்னர், தேவ ஆவியால் ஏவப்பட்ட எலிசபெத் அம்மாள் வாழ்த்துகிறார். இந்த மரபை — விவிலிய வழியைக் கடைப்பிடிக்கும் உண்மைக் கிறிஸ்தவர்கள் செபமாலைத் தியானத்தின் போது அதே வார்த்தைகளால் வாழ்த்துகிறார்கள். இதுவே சரியான நெறி என்பது பல எடுத்துக்காட்டுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. இறுதியாகக் கன்னிமரியாள் பற்றிய கொள்கைப் பிரகடனம்போல இந்நூலில் எடுத்தாளப்படும் வாசகம் கருத்திற் கொள்ளவேண்டிய ஒன்றாகும் அதாவது "மரியாள் ஒரு தெய்வமல்ல — ஒரு தேவதையுமல்ல — ஆராதனை அவளுக்குரியதுமல்ல — ஆனால், அதே வேளையில் அவள் ஒரு சாதாரண யூதப் பெண்ணுமல்ல — அவள் ஆண்டவனின் தாய் (லூக். 1 : 43) யேசு அவளுக்குள் உருவாகியதால் யேசுவால் மகிமைக்கு உயர்த்தப்பட்ட தேவனின் தாய் — யேசு மகிமைப் படுத்தியவளை மக்கள் மகிமைப் படுத்துகிறார்கள் — கபிரியேல் தூதன் போற்றிப் புகழ்ந்தவளை மக்கள் போற்றுகிறார்கள். தேவையுள்ளவர்களுக்காகப் பரிந்து பேசப் பிரார்த்திக்கிறார்கள்" மேற்படி உண்மைகள் பரவலாகவும் ஆழமாகவும், ஆனால் சுருக்கமாகவும், ஒருமுறை படித்துவிட்டால் உயிருள்ளவரை நினைவில் இருக்கத்தக்க வகையில் கூறப்பட்டிருப்பது உண்மையில் பாராட்டுதற்குரியதாகும்.

மரியாள் ஆண்டெனப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள இந்த ஆண்டிலே, மரியாள் பக்திக்கு அநாவசிய சவால்கள் பல எழுப்பப்பட்டுள்ள இக்காலத்திலே இந்நூல் வரவேற்கக்கூடிய தவிர்க்கமுடியாத ஒரு தேவையாகும்.

இதனைப் பொருட்பொலிவோடும், சுருக்கமாகவும் சுவையாகவும் ஆக்கியவர்கள் சகலரது பாராட்டுக்கும் உரியவர்களாவர்.

**வித்துவான் சா. இ கமலநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் வளர

துணை நில்லுங்கள்! பரிசை வெல்லுங்கள்!!

## செய்யவேண்டியது இதுதான்

- தொண்டனுக்கு இரண்டு புதிய சந்தாக்களைச் சேர்த்து, பிரசுரிக்கப்பட்டுள்ள சந்தாப் படிவத்தையும் நிரப்பி இருவரதும் ஆண்டு சந்தாவாக (50 + 50) ரூபா 100/- காசுக்கட்டளையில் ஆசிரியர் பெயருக்கு அனுப்பப்படவேண்டும்.

- ஒவ்வொரு 200 சந்தாக்கள் சேர்ந்ததும் சீட்டிழுப்பின் மூலமாக, சந்தாக்கள் சேர்த்தனுப்பிய மூவருக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

- ஒருவர் எத்தனை சந்தாக்கள் வேண்டுமானாலும் சேர்த்து அனுப்பலாம். ஆனால் அவை சந்தாப் படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு படிவமும் தனித்தனியாகவே கணக்கிடப்படும். அதிக சந்தாக்கள் சேர்த்து அனுப்புவோருக்கு சிறப்புப் பரிசுகள் உண்டு.

- குறிப்பிடப்படும் மாதத்திலிருந்து தொடர்ந்து பன்னிரண்டு மாதங்களுக்குத் தொண்டன் இதழ்கள் தவறாது அனுப்பப்படும்.

- ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு சந்தாக்களையாவது சேர்த்து தொண்டன் வளரத் துணை நிற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முகவரி:

**ஆசிரியர் - தொண்டன்**
சமூகத்தொடர்பு நிலையம்,
ஆயரகம், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் வளரத் துணைநிற்போம்

## சந்தாப் படிவம்

(1) பெயர்: ..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

..............................................................................

(2) பெயர்: ..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

..............................................................................

இங்கே கத்தரிக்கவும்

— — — — — — — — — — — — — — — —

இதொண்டன் வளர்ச்சிக்காக இரண்டு சந்தாதாரர்களைச் சேர்த்துள்ளேன். அவர்களது ஆண்டுச் சந்தா ரூபா 100/- ரூபாவுக்கான காசுக் கட்டளையையும் இத்துடன் இணைத்துள்ளேன். இருவருக்கும்... ... ......... மாதம் முதல் தொண்டன் சஞ்சிகையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

வணக்கம்!

இப்படிக்கு

..............................................

ஒப்பம்.

எனது பெயர்: ..............................................................................

முகவரி: ..............................................................................


..............................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 49

(கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு நிகழ்ச்சிகள்)




பரிசு:

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**01 - 04 - 88**

முழுப் பெயர்:..........................................................................................

முகவரி:..........................................................................................

..........................................................................................

### இடமிருந்து வலம்

1. உரோமைப் பேரரசினுல் நியமிக்கப்பட்ட அதிபதி.
2. தங்கள் பாவத்திற்கு இது சொல்ல அவர்களுக்கு வழியில்லை என்கிருர் இயேசு.
4. ஒரு சிறு புதர்ச் செடி.
5. முடிவில்லாத இதனை எடுக்கவும் பிலாத்துவின் அனுமதி தேவைப்பட்டது.
6. ஆடைகளைப் பகிரவும் இது பயன்படுத்தப்பட்டது.
7. வானதூதர் தோன்றுமிடம்
8. இறை மனித உறவின் அடிப்படை அம்சம்
9. அனல் இதனைப் போக்கும்
11. சீமோனின் மகனுன யூதாசைத் தூண்டியது.
12. சதி செய்தவர் யூதாசுக்குக் கொடுத்ததன் எண்ணிக்கை
13. கோதுமை மணி மடிய வேண்டிய இடம்
14. தலைமைக் குருவின் ஊழியன் தாக்குண்டது இதனுல்
15. இயேசுவுக்குக்குடிக்கக்கொடுக்கப்பட்டது
16. நெருப்பு மூட்டப் பயன்படுவது நிலை தடுமாறி விட்டது.

### மேலிருந்து கீழ்

1. சிலுவையில் அறைந்தபோது இதனை எடுத்து விட்டனர்.
3. இதனைச் சுமந்து வருபவனைப் பின்பற்றும்படி இயேசு சீடரைப் பணித்தார்.
6. இயேசுவைப் பின்பற்றியவர்.
7. வார்த்தை.
8. சூசை பிலாத்திடம் போய்க் கேட்டது.
10. இராயப்பர் அழுததால் இது தலைகீழாக நிற்கிறது.
11. இயேசு தந்தையை அழைத்த விதத்திலும் முடிவு இல்லை.
12. இயேசுவுக்கு அமைந்த முடி.
13. இயேசுவின் மிக நெருங்கியவர் முடிவின்றி நிற்கிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - 47
## முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. குதிரை
2. பாவிகள்
5. கட்சி
7. சகோதரி
8. சால் (சாயல்)
10. உப்பு
11. எண்ணெ(ய்)
12. செவி
13. ஆறு
14. பலி
15. சமாதானம்

**மேலிருந்து கீழ்**

3. விபசாரம்
4. கடல்
6. சிரிப்பு
7. சதை
9. அறிவிலி
10. உண்மை
11. எலியா
12. செபம்
13. ஆமா (ஆன்மா)

**பரிசு பெறுவோர்**

**1ம் பரிசு:**

ஞானப்பிரகாசம் தனுஷா
சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.

**2ம் பரிசு;**

செல்வராசா சந்திரகுமார்
வீச்சுக்கல் முனை,
மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

1. அலோசியஸ் அகுஸ்தீன்
கோயில் வீதி,
சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.

2. திமோதி ஆனந்தவாசன்
அன்பு இல்லம்,
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

3. G. மேவின் பெர்னாண்டோ
30, சிறில் ஒழுங்கை,
மட்டக்களப்பு.

4. K. சுதாகரன்
புனித வளனார் இல்லம்
கல்முனை.

5. செல்வி. E. Mஃ எமெல்டா குரூஸ்,
A. S. C.
மல்வத்தை.

பங்குபற்றியவர்கள்; 58


சரியான விடை அளித்தோர்: 50

— அனைவருக்கும் நன்றி —

> உள்ளத்தில் பள்ளம் ஏற்படும் போதுதான் மனிதர்களின் வாழ்க்கையில் பள்ளம் ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### யதார்த்தமான சிறுகதை

தைமாதத் தொண்டன் படித்துச் சுவைத்தேன். இலக்கியமணியின் அட்டைக்கவிதை வரிக்குவரி போதனையூட்டக் கூடிய கருத்துக்களைக் கொண்டிருந்தது. மேலும்யோகியின் சிறுகதை யதார்த்த ரீதியாக எழுதப்பட்டிருந்தது. கதையில் வரும் 'பெயர் தெரியாத அவள்' பாத்திரம் அன்றாட வாழ்விலே உலாவக்கூடிய ஒன்றுதான். சமயத்தோடு சமூகத்துக்காகவும் உழைக்கும் தொண்டனின் சேவையைப் பாராட்டுகிறேன்.

M.L.M. அன்சார்
காத்தான்குடி.

### பாராட்டு

தைமாதத் தொண்டனில் வெளிவந்த, 'அந்தப் பாவம் எனக்கு' என்ற சிறுகதை என் நெஞ்சை மிகவும் கவர்ந்தது. எழுதியவருக்கு பாராட்டு. இது போன்ற கருத்துள்ள கதைகளை தொடர்ந்து எழுதட்டும்.

செல்வி.S. டெல்ஷியா

### ஒரு வாழ்த்து

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டிமூலம் வேதாகம அறிவை வழங்கும் தொண்டனே நீ மேலும் சிறப்புற எமது வாழ்த்துக்கள்.

V. E. செல்வநாதன்
K. மிருஷான்

### வித்தியாசமான பாராட்டு

கத்தியைத் தீட்டாதே உந்தன் புத்தியைத் தீட்டு' என்ற சினிமாப் பாடலை எதிரொலி மூலம் மீண்டும் ஒலிக்கச் செய்தது மட்டுமன்றி தமது இளம் தலைமுறையினருக்கும் புத்தி புகட்டியமை பாராட்டுக்குரியதே.

தொண்டனில் விலையுயர்வை துணிவுடன் வெற்றிகரமாக உயர்த்தியுள்ளமைக்கு ஆசிரியருக்கும் எமது பாராட்டு.

செல்வி கலிஸ்ரா அருளப்பு
அம்பாறை

(தொண்டனின் விலை கூடிவிட்டதே என்று பலரும் அழுது வடிகையில் நீங்கள் ஒருவரே பாராட்டுத் தெரிவித்துள்ளீர்கள். நன்றி)

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.



# காற்றில் கலந்து வரும்

நாள்: 3 - 4 - 88
நேரம்: மாலை 7-00 மணி
நிகழ்ச்சி: புதிய உலகம்
சிறப்பு: ஈஸ்டர் விருந்து - நாடகம்
★ அவன் உயிர்த்து விட்டான் — சிறுகதை

நாள்: 9, 10, 11 - 4 - 88
நேரம்: காலை 5 - 50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர்; திரு. P. T. பிரான்சிஸ்

நாள்: 12 - 4 - 88
நேரம்: மாலை 6 - 45 மணி
நிகழ்ச்சி: சிறுவர் உலகம்

நாள்: 17 - 4 - 88
நேரம்: மாலை 7-00 மணி
நிகழ்ச்சி: புதிய உலகம்
சிறப்பு: பார்த்தலும் படித்தலும்
★ நூல் விமர்சனம்

நாள்: 23, 24, 25 - 4 - 88
நேரம்: காலை 5-50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர்: சகோ. தியோபிலஸ்

நாள்; 26 - 4 - 88
நேரம்: மாலை 6-45 மணி
நிகழ்ச்சி: சிறுவர் உலகம்
சிறப்பு: அநாதையாகும் அரும்புகள் நாடகம்
எழுதியவர்: எஸ். ஜெயராஜா

## குறிப்பு

குருத்துஞாயிறு, புனித வியாழன், புனித வெள்ளி, புனித சனி, உயிர்ப்பு ஞாயிறு ஆகிய தினங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும் தொண்டன் - அச்சுக்குப் போகும் வரை ஒலிபரப்பாகும் நேரங்கள் எமக்குக் கிடைக்காததால் நேயர்களுக்கு தெரிவிக்க முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

—மலர்வேந்தன்—

இச்சஞ்சிகை மட்டக்களப்பு புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 11 - 03 - 1988ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org